KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

மலர்:- 33, 23 January 2026 இதழ்:- 04

# ஈழநாடு


பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழம் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## இலங்கையில் புதிய அரசியலமைப்பு முயற்சிகள் துரிதப்படுத்தப்படுவதாக ஸ்ராலினுக்கு யார் சொன்னது?

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ் தேசியப் பேரவை தூதுக் குழுவினர் தன்னைச் சந்தித்த ஒரு மாத காலத்திற்குள், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்ராலின் இலங்கை தமிழர்களின் மனக்குறைகளை நிவர்த்தி செய்யக் கூடிய அரசியலமைப்புச் செயன்முறையை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (6ம் பக்கம் பார்க்க)







## வடக்கை வெற்றி கொள்வது?



முன்னர் வடமாகாணத்துக்கு தனி ஆட்சி தேவை என்று வடமகாண மக்கள் கூறினார்கள். ஆனால் முதன் முதலாக யாழ் மக்கள் இன்று எங்களுடைய ஆட்சியை தங்களுடைய ஆட்சி என்று நம்புகிறார்கள்..

இது அனுர யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறியது. அவர் அவருடைய பேச்சின் போக்கில் வடக்கு யாழ்ப் பாணம் போன்ற வார்த்தைகளை அவற்றுக்குரிய அரசியல் அடர்த்தி (17ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தால் மனித உரிமைகள் மீறப்படும் அபாயம் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை!




இலங்கை அரசாங்கத்தினால் முன் மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமானது தற்போது நடைமுறையிலுள்ள அடக்குமுறை சட்டத்தைப் போன்றே பல மோசமான பிரிவுகளைக் கொண்டுள்ளதாக Human Rights Watch அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. அரச பாதுகாப்பிற்கான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் 2025 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட இந்தவரைவு தன்னிச்சையான கைதுகள் மற்றும் சித்திரவதைகளுக்கு வழி வகுக்கும் பழைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (2ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இருந்து தெற்குக்கான அநுரவின் செய்தி?

ஜனாதிபதி அனுர தனது வடக்குக்கான வருகை யின் போது வடக்கு மக்கள் எதிர்பார்த்த அல்லது விரும்பும் செய்திகள் எவற்றையும் கூறாது அவர்கள் எதிர்பாராத (7ம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தால் மனித உரிமைகள் மீறப்படும் அபாயம் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை!




இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமானது தற்போது நடைமுறையிலுள்ள அடக்குமுறை சட்டத்தைப் போன்றே பல மோசமான பிரிவுகளைக் கொண்டுள்ளதாக Human Rights Watch அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. அரச பாதுகாப்பிற்கான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் 2025 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட இந்தவரைவு தன்னிச்சையான கைதுகள் மற்றும் சித்திரவதைகளுக்கு வழிவகுக்கும் பழைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மறு வடிவமாகவே இருப்பதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

Human Rights Watch அமைப்பின் ஆசிய பிராந்தியத்திற்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி இது குறித்துத் தெரிவிக்கையில், பயங்கரவாதத்தை ஒடுக்குவதைத் தாண்டி, அரசாங்கம் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கே இத்தகைய சட்டங்கள் வழிவகுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச்லுகையைப் பெறுவதற்காக இலங்கை வழங்கிய மனித உரிமை வாக்குறுதிகளை இந்த புதிய சட்டமூலம் மீறுவதாகவும், இது சர்வதேச தரங்களுக்கு எவ்விதத்திலும் பொருந்தவில்லை என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, 2024 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார். இருப்பினும், தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்ட மூலம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப் பதிலாக பழைய சட்டத்தின் அதே கொடூரமான அதிகாரங்களை மீண்டும் ஒரு புதிய பெயரில் கொண்டு வருவதாகத் தெரிகிறது.

குறிப்பாக, இராணுவத்தினருக்கு பிடியாணை இன்றி சோதனை நடத்தும் அதிகாரம் மற்றும் ஒரு வருட காலம் வரை ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரம் போன்றவை இதில் உள்ளடங்கியுள்ளன.

இந்தச் சட்டமூலத்தின் கீழ் பயங்கரவாதம் என்பதற்கான வரையறை மிகவும் விரிவாகவும் தெளிவற்றதாகவும் உள்ளதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. இது சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களைக் குறிவைக்கப் பயன்படுத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது. கடந்த காலங்களில் இத்தகைய சட்டங்கள் பிரதானமாக தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ள நிலையில், புதிய சட்டமும் அதே பாதையில் பயணிப்பது புலம்பெயர் தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை அரசாங்கம் தகவல் அளித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் மொத்த கைதுகளுடன் ஒப்பிடுகையில் அதிகமாகும்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தமது உறவினர்களை நினைவு கூரும் நிகழ்வுகளைத் தடுப்பதற்கும், சிவில் சமூகச் செயல்பாடுகளை முடக்குவதற்கும் இச்சட்டம் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகமனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கை விரிவாக விளக்கியுள்ளது.

புதிய சட்டமூலத்தின்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் ஒருவரை ஓராண்டு வரை நீதிமன்றப் பிணையின்றித் தடுப்புக்காவலில் வைக்க முடியும். மேலும், எவ்வித பிடியாணையும் இன்றி ஒருவரின் இல்லங்களுக்குள் நுழைந்து சோதனையிடவும், ஆவணங்களைக் கைப்பற்றவும் பாதுகாப்புப் படையினருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது சட்டத்தின் ஆட்சியைப் பலவீனப்படுத்தி, சித்திரவதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் என மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த அறிக்கையின் முடிவில், சர்வதேச சமூகமும் ஐரோப்பிய ஒன்றியமும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை அவரது வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அடக்குமுறைச் சட்டங்களை மறுவடிவம் செய்வதை விடுத்து, அவற்றை முழுமையாக நீக்கி, சர்வதேச மனித உரிமை விதிகளுக்கு உட்பட்ட ஒரு புதிய சட்ட கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை Human Rights Watch வலியுறுத்தியுள்ளது.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**

203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

கடந்த 14 வருடங்களாக உங்களின் அன்போடும் ஆதரவோடும் ஈழநாடு பத்திரிகை போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இல்லமான அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் ஆகியவற்றைப் பராமரித்து வருவது நீங்கள் அறிந்ததே.

இந்நிலையில் தனிப்பட்ட ஒருவர் செஞ்சோலை 2026 என்ற ஓர் நிகழ்வை நடத்தவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த தனிநபருக்கும் செஞ்சோலை உட்பட 3 இல்லங்களுக்கும் எந்தவி தொடர்புகளும் கிடையாது என்பதையும் இது போன்ற தான்தோன்றித்தனமாக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பற்றி கவனமாக இருக்குமாறு அன்பு உறவுகளைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். இந்தத் தகவலை உங்கள் முகநூல் மூலமாகவோ தனிப்பட்ட முறையிலோ பகிர்ந்து அனைவருக்கும் தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

Reg.No : NPC/30/14/02/01

**செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையம்**

**SENCHCHOLAI CHILD DEVELOPMENT CENTER**

T.K.Parameswaran

10.01.2026

Chief Editor

Eelanadu Newspaper

Eelanadu1993@gmail.com/ Tel: (416) 841-9600

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகாலப் போரின் கொடூர விளைவுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை முதன்மை நோக்காகக் கொண்டு அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் போன்ற சிறுவர் இல்லங்கள் அரச அனுமதி பெற்று சட்டரீதியாக கடந்த பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றன.

அந்த மனிதாபிமானப் பணிகளுக்கு உறுதுணையாக, கனடாவில் இருந்து கடந்த 33 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் ஈழநாடு பத்திரிகை, கனடியத் தமிழ் சமூகத்தின் பேராதரவோடு, தொடர்ச்சியாக கடந்த சுமார் 14 ஆண்டுகளாக இச்சிறுவர் இல்லங்களுக்கு உதவி வழங்கி வருகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். எமது இல்லங்களின் சார்பாக கனடாவில் ஈழநாடு பத்திரிகை மாத்திரமே இப்பணியைச் செய்ய நாம் அனுமதி வழங்கி இருக்கின்றோம்.

இத்தகைய பொறுப்புணர்வும் வெளிப்படைத்தன்மையும் அவசியமான சூழலில், கனடாவில் உள்ள ஒரு தனி நபர், சம்பந்தப்பட்ட சிறுவர் இல்லங்களின் எந்தவித அனுமதியையும் பெறாமல், சுயநல நோக்கோடு அடுத்த மாதம் ஒரு நிகழ்வை நடத்தி நிதி திரட்டவுள்ளதாக அறிவித்துள்ளமை எங்களை ஆழ்ந்த கவலையிலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறான அனுமதியற்ற, ஒருதலைப்பட்சமான நிதி திரட்டும் முயற்சிகள் மனிதாபிமானப் பணிகளின் நம்பகத்தன்மையை பாதிப்பதுடன், நன்கொடை வழங்க விரும்பும் மக்களை குழப்பத்திற்குள்ளாக்குவதோடு, சிறுவர் இல்லங்களின் கண்ணியத்திற்கும் நிர்வாக ஒழுங்குக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். எனவே, சம்பந்தப்பட்ட தனிநபர் உடனடியாக இத்தகைய செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல், எதிர்காலத்தில் எந்தவொரு நிதி திரட்டும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுமாயின், அது கட்டாயமாக சம்பந்தப்பட்ட இல்லங்களின் எழுத்துமூல அனுமதியுடனும், பொறுப்பான அமைப்புகளின் ஒருங்கிணைப்புடனும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் மட்டுமே நடைபெற வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

கனடியத் தமிழ் சமூகத்தினருக்கும், நன்கொடை வழங்கும் நல்லுள்ளங்களுக்கும் எமது பணிவான வேண்டுகோள் என்னவெனில், அனுமதியற்ற, உறுதிப்படுத்தப்படாத நிதி திரட்டல் முயற்சிகளில் ஈடுபடவோ, அவற்றுக்கு ஆதரவு வழங்கவோ வேண்டாமென கேட்டுக் கொள்கிறோம்.

போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எதிர்காலம் என்பது யாருடைய தனிப்பட்ட சுயநலத்திற்கும் இரையாகக் கூடாது. மனிதாபிமானம், பொறுப்பு, நேர்மை ஆகிய மதிப்புகளின் அடிப்படையிலேயே இத்தகைய பணிகள் தொடர வேண்டும்.

அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் சார்பாக,

President
Senchcholai Child Development Center (Girls)
4, 5 stage 2, Thiruvaiyaru, Kilinochchi.

Address
4, 5 Stage 2, Thiruvaiyaru,
Kilinochchi.
Sri Lanka.

T.P No : 0094 21 228 5770
: 0094 71 535 4504
Email : sencholai1992@gmail.com
Website : www.senchcholai.org

Bank : Peoples Bank, Kilinochchi, Sri Lanka
SWIFT Code : PSSKLKLX
A/C No : 048100180069859
A/C Name : SENSOLAI CHILDREN CARE HOME

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


**Balachandran Law Office**

**Balachandran Muthaiah**

**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# புதிய அரசியலமைப்பு அனைத்து இனக் குழுமங்களின் பங்கேற்புடன் உருவாக வேண்டும் - எதிர்க்கட்சிகள்



நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்று அனைத்து இனக் குழுமங்களின் பங்கேற்புடன் உருவாக்கப்படுவது அவசியமாகும். அவ்வாறு உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்பிற்கான பகிரங்க கலந்துரையாடல்களில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பங்கேற்பு அவசியம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

கொழும்பு ஜானகி ஹோட்டலில் 21 ஜனவரி 2026 புதன்கிழமை வன் டெக்ஸ்ட் இனிஷியேடிவ்வின் ஏற்பாட்டில் 'இலங்கையில் ஆட்சி நெருக்கடிகள்' எனும் தொனிப்பொருளில் ஷீரால் லக்திலகவின் தலைமையில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, அஜித் பி பெரேரா, தயாசிறி ஜயசேகர ஆகியோரும், ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரளவும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் மஹிந்த அமரவீர, லசந்த அழகிய வண்ணவும், அநுர பிரியதரஷன யாபா, இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில் அதன் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநாத், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பிரேம்நாத் சி தொலவத்த, கருணாரத்ன பரணவிதான உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

அத்துடன் துறைசார்ந்த நிபுணர்களான லால் விஜேநாயக்க, ஜயம்பதி விக்கிரமரத்ன, விரஞ்சன ஹேரத், நிமல்கா பெர்னார்டோ, சுதர்ஷன குணவர்தன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது சுமந்திரன் ,இளைதம்பி ஸ்ரீநாத் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் இலங்கையில் தமிழ் மக்களின் பங்கேற்பில்லாத வகையில் தான் இலங்கையில் இதுவரை உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்கள் காணப்படுகின்றன.

எதிர்வரும் காலத்தில் அவ்விதமான செயற்பாட்டுக்கு இடமளிக்க விட முடியாது. சமத்துவ பங்கேற்பு புதிய அரசியலமைப்பு செயற்பாட்டில் உறுதிப்படுத்துவதுடன் தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை குழுக்களின் அபிலாசைகள் உள்வாங்கப்பட வேண்டும். பெரும்பான்மை பாராளுமன்ற பிரதிநிதித்துவம் காணப்படுகிறது என்பதற்காகவும் நிறைவேற்றதிகாரம் இருக்கிறது என்பதற்காகவும் எதேச்சதிகாரமாக செயற்பட முடியாது. அவ்வாறு செயற்படுவதானது சமூக ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். அது மக்கள் ஆணைக்கு முரணானதாகும். ஆகவே அரசாங்கம் புதிய அரசியலமைப்பு செயற்பாட்டில் வெளிப்படை தன்மையுடன் பங்கேற்பது அவசியமாகும் என்றனர்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தயாசிறி ஜயசேகர, ஹர்ஷ டி சில்வா உள்ளிட்டவர்கள் அரசாங்கம் பாராளுமன்றக் குழுக்களில் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு இடமளிக்காமல் தீர்மானங்களை எடுக்கின்ற போக்கு தொடர்ந்து கொண்டிருக்கிறது. அவ்விதமான நிலையில் புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளையும் அவர்கள் அதே போக்கை பின்பற்றுவார்களாக இருந்தால் அது மீண்டும் பெரும்பான்மைவாத அரசியல் அமைப்பதாகத் தான் இருக்கும்.

பல கட்சி பங்கேற்பு ஜனநாயக தன்மைகள், அனைத்தையும் கை கழுவும் செயற்பாடாகவே அது அமையும். அவ்விதமான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. ஆகவே புதிய அரசியலமைப்பு உரையாடல்கள் அரசாங்கத்தின் பங்கேற்பென்பது அவசியமானதாகும். அதனை அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது. அவர்கள் நிச்சயமாக வெளிப்படையான செயற்பாட்டில் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும். இதேநேரம் புதிய அரசியலமைப்பு செயற்பாட்டில் முற்போக்கான விடயங்கள் சிலவற்றை உள்ளீர்ப்பது அவசியமாகும்.

உதாரணமாக தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பில் காணப்படுகின்ற சிவில் அரசியல் கலாசார உரிமைகள் உள்ளீர்க்கப்படுவதுடன் அவை அடிப்படை உரிமைகளுக்குள் உள்வாங்கப்படுவதும் மேம் பாடான அரசியலமைப்பிற்கு வழி வகுப்பதாக இருக்கும். அத்துடன் நிதி பயன் படுத்துகின்ற அதிகாரங்கள் பொருளாதார விடயங்கள், உள்ளிட்டவற்றையும் அரசியலமைப்பில் உள்வாங்க வேண்டியது அவசியமாகிறது. அது நாட்டின் எதிர்கால திட்டமிடலுக்கு மிகவும் முக்கியமானதாகும் என்று குறிப்பிட்டனர்.

இதேவேளை கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன , லால் விஜயநாயக்க போன்றவர்கள் ஏலவே தயாரிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு வரைவுகளை முன்மொழிவுகளையும் மக்கள் கருத்துக்களை வெளியிட்ட அறிக்கைகளையும் சீர்தூக்கி பார்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு, அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக புதிய அரசியலமைப்பு செயற்பாட்டில் பங்கேற்பதற்கான அழைப்பினை விடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டனர்.


ESTD - 1996

# நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்

NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY

Ontario not for profit corporation No: 1284680
Date of Issue of Letters, Patent: March 1996
80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4

**நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம் விடுக்கும்**

**2026ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்!!!**

**காலம்:** 24-January-2026 **மாலை:** 6:30 **இடம்:** தீபம் கலைக்கூடம்

2025ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தல், 2026, 2027 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும், சங்கத்தின் எதிர்கால நலன் கருதிய சிறப்பு சிந்தனைகளோடு கூடிய நல் ஆலோசனை ஆண்டு பொதுக்கூட்டம்.

**பின்குறிப்பு:**
சங்கத்தின் 2025 ஆண்டுக்கான அங்கத்துவ பொது சந்தா ($100) பணத்தினை பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக செலுத்தி தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்தி (2026)ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

"ஊருக்கு பலமாய் உறவுகளாய் இணைவோம்.....வாரீர்....."

**இங்கனம்:**
நிர்வாகசபை
நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்.

**தொடர்புகளுக்கு:**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | பத்திராதிபர் |
|---|---|---|---|
| ப. சுதாகரராசா | க. ந. ஜெயசிவதாசன் | மு. ரவீந்திரன் | சௌ. திருமாறன் |
| 416.823.0983 | 416.825.8083 | 416.579.4502 | 416.317.7544 |

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப உதவி வழங்குமாறு கனடிய அரசை வலியுறுத்த தயார் என கனடிய ஆளும் தரப்பு எம்.பி.ஜூவனிதா நாதன் தெரிவிப்பு

பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவிகளை வழங்குவது குறித்து கனேடிய அரசாங்கத்திடம் வலியுறுத்துவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த கனேடிய ஆளும் லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜூவனிதா நாதன், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மக்களுக்கு அவசியமான உதவிகள் உரிய காலப்பகுதியில் சென்றடைவதில் குறைபாடுகள் நிலவுவதாகக் கரிசனை வெளியிட்டார்.

அது மாத்திரமன்றி அனர்த்தத்தினால் மிகமோசமான தாக்கங்களுக்கு முகங்கொடுத்திருக்கும் மலையக மக்கள் தொடர்பில் தனது கவலையை வெளிப்படுத்திய அவர், அம்மக்களுக்கு காணி உரிமையை வழங்கி பாதுகாப்பான வீடுகளில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

உலகளாவிய ரீதியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் தமிழக அரசினால் கடந்த திங்கட்கிழமை (12) சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்துகொண்ட கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜூவனிதா நாதன், கடந்த 14 - 17 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கடந்த நவம்பர் மாத இறுதியில் 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தத்தினால் நாடு முகங்கொடுத்திருக்கும் பாதிப்புக்கள், கனேடிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதம், இலங்கைக்கு தேவையான மேலதிக உதவிகள் என்பன பற்றி ஆராயும் நோக்கில் நாட்டுக்கு சென்றிருந்த ஜூவனிதா, இக்காலப் பகுதியில் கொழும்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் மற்றும் கனேடிய உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதில் பங்களிப்புச்செய்யும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினருடன் சந்திப்புக்களை நடாத்தினார்.

அது மாத்திரமன்றி வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கும் மத்திய மலைநாட்டில் கண்டி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட அவர், அங்கு பிரதேச செயலக அதிகாரிகள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டர் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளிட்டோருடன் களநிலைவரம் குறித்துக் கலந்துரையாடினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விஜயத்தின் நிறைவில் தான் அவதானித்த விடயங்கள் குறித்து கேசரியிடம் கருத்துரைத்த ஜூவனிதா, பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அவசியமான மேலதிக உதவிகள் குறித்து ஆராய்ந்திருப்பதாகவும், அவ்வுதவிகளை உரிய வழிமுறைகளின் ஊடாக வழங்குமாறு கனேடிய அரசாங்கத்திடம் வலியுறுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியாத போதிலும், வடக்கில் பேரனர்த்தத்தினால் பாரிய வாழ்வாதாரப்பாதிப்பு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்ததாகக் குறிப்பிட்ட அவர், அம்மக்களுக்கு அவசியமான நிவாரண உதவிகள் சென்றடைவதிலும் குறைபாடுகள் நிலவுவதாகக் கரிசனை வெளியிட்டார்.



அதேபோன்று மலையக மக்கள் தொடர்பிலும் மிகுந்த கவலையை வெளிப்படுத்திய அவர், நீண்டகாலமாக ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி வரும் அம்மக்களுக்கு காணி உரிமையை வழங்கி, அவர்களைப் பாதுகாப்பான வீடுகளில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிக அவசியம் என வலியுறுத்தினார்.

மேலும் எதிர் வருங்காலங்களில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில், அதனால் ஏற்படக்கூடிய சேதத்தைக் குறைத்துக் கொள்வதற்கான கொள்கைகள் மற்றும் வசதிகளை வகுப்பதற்கு ஏற்றவகையில் அனர்த்த அச்சுறுத்தல் மதிப்பாய்வு ஒன்றை அரசாங்கம் இப்போது முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜூவனிதா நாதன் பரிந்துரைத்தார்.

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற கனடியத் பொதுத் தேர்தலில், பிக்கரிங்-புரூக்ளின் தொகுதியில் ஆளும் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகுவதற்கு முன்பு, அவர் யோர்க் பிராந்திய பாடசாலை வாரியத்தின் அறங்காவலராகவும் பின்னர் மார்க்கம் மாநகர சபை உறுப்பினராகவும் நீண்ட காலம் பொதுச் சேவையாற்றியுள்ளார். ஒரு உளவியல் பட்டதாரியான இவர், குடும்ப வன்முறைக்கு எதிரான ஆலோசகராகவும், பெண்கள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவரது தமிழ் மரபும், சமூக நீதி மீதான அக்கறையும் கனடியத் தமிழ் மக்கள் மத்தியில் இவருக்கு நற்பெயரைப் பெற்றுத் தந்துள்ளன.




# இலங்கையில் புதிய அரசியலமைப்பு முயற்சிகள் துரிதப்படுத்தப்படுவதாக ஸ்ராலினுக்கு யார் சொன்னது?

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ் தேசியப் பேரவை தூதுக் குழுவினர் தன்னைச் சந்தித்த ஒரு மாத காலத்திற்குள், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்ராலின் இலங்கை தமிழர்களின் மனக்குறைகளை நிவர்த்தி செய்யக் கூடிய அரசியலமைப்புச் செயன்முறையை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு இராஜதந்திர ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தன்னை சந்தித்த இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள் தற்போது தங்களது நாட்டில் முன்னெடுக்கப்படும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தமிழர்களுக்கு தோற்றுவிக்கப் போகும் ‘பாரதூரமான ஆபத்துக்களை சுட்டிக் காட்டியதாக கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் முதலமைச்சர், சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் பன்முகத்தன்மை மற்றும் சமத்துவ கோட்பாடுகளை பேணிப் பாதுகாக்கவும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் கூட்டாட்சி ஏற்பாடுகளை புதிய அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

அத்தகையதொரு அணுகுமுறையை புதுடில்லி கடைப் பிடித்தால் அது பிராந்திய அமைதியை உத்தரவாதம் செய்யும் நாடு என்ற இந்தியாவின் வகிபாகத்தை கௌரவிப்பதாக மாத்திரமல்ல, கூட்டாட்சியையும் மொழி மற்றும் இனத்துவ சிறுபான்மையினங்களையும் பாதுகாக்கும் இந்தியாவின் அரசியலமைப்பு விழுமியங்களுக்கு இசைவானதாகவும் அமையும் என்று கூறியிருக்கும் ஸ்ராலின் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பது என்ற போர்வையில் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளை துரிதப்படுத்தியிருக்கின்றது என்றும் உத்தேச கட்டமைப்பு அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் அபிலாசைகளை அலட்சியம் செய்வதன் மூலம் அவர்கள் மேலும் ஓரங் கட்டப்பட்டக் கூடிய அச்சுறுத்தலை தோற்றுவிக்கும் ஒற்றையாட்சி முறையை (ஏக்கிய ராஜ்ய) வலுப்படுத்துவதாக தோன்றுகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் அனுசரணையுடன் 1985 ஓகஸ்டில் பூட்டானில் அன்றைய இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்ப் பிரதிநிதிகளினால் முன் வைக்கப்பட்ட ‘திம்புக் கோட்பாடுகள்’ தற்போதைய பின்புலத்தில் தொடர்ந்தும் பொருத்தமானவையாக இருப்பதாக தன்னைச் சந்தித்த தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தியதை பிரதமர் மோடிக்கு சுட்டிக் காட்டியிருக்கும் முதலமைச்சர் அந்த கோட்பாடுகளில் அடங்கியிருக்கும் அம்சங்களை உள்ளடக்காமல் கொண்டு வரப்படும் எந்தவொரு புதிய அரசியலமைப்பும் அநீதி மற்றும் உறுதிப்பாடின்மையை தொடரச் செய்யும் என்பதுடன் மீண்டும் மோதல்களுக்கும் மனிதாபிமான நெருக்கடிக்கும் வழி வகுக்கும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

1987 இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கை உட்பட வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டிருக்கும் நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதிக்கும் நீதிக்குமாக நீண்டகால அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டிருக்கிறது என்றும் ஸ்டாலின் எழுதியிருக்கிறார்.



ஸ்டாலினின் இந்த கடிதத்தை இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வைக் காணும் முயற்சிகளில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு தமிழ்நாடு மூலமாக நெருக்குதலை பிரயோகிப்பதற்கு தங்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு கிடைத்த முக்கியமான ஆரம்பக்கட்ட வெற்றியாக தமிழ் தேசிய பேரவை கருதுகிறது. கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய பசுமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்த அரசியல் கருத்தரங்கில் கஜேந்திரகுமார் நிகழ்த்திய உரை இதை தெளிவாக உணர்த்துகிறது.

தங்களது தமிழ் தேசியவாத நிலைப்பாட்டுக்கு தமிழ்நாட்டில் ஆதரவு அலையொன்று ஏற்படும் என்பதில் நம்பிக்கையைக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார், இலங்கை தமிழரசு கட்சியையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியையும் இணைத்துக் கொண்டு இந்த முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்று கூறுகிறார். தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக் காலம் வரைக்கும் அந்த இரு கட்சிகளும் தமிழ் தேசிய நிலைப்பாட்டுக்கு தமிழ்நாட்டின் ஆதரவைப் பெறுவதில் தவிர்க்க முடியாத சக்திகள் என்பது அவரது நிலைப்பாடாக இருக்கிறது.

தனியொரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட தமிழ் தேசிய பேரவை தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலமாக இத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்றால் ஒற்றையாட்சியை நிராகரிக்கும் தமிழ் தேசியவாத நிலைப்பாட்டைக் கொண்ட ஏனைய தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டாக செயற்படும் பட்சத்தில் தமிழ்நாட்டில் ஆதரவு அலையை உருவாக்குவதில் பெரிய பாய்ச்சலை ஏற்படுத்த முடியும் என்பது அவரது நம்பிக்கையாக இருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு சென்று அரசியல் கட்சிகளை சந்தித்த பிறகு இதைக் கூறுகின்ற கஜேந்திரகுமார், முன்கூட்டியே தமிழரசு கட்சியுடனும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடனும் கலந்தாலோசித்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஏன் முயற்சிக்கவில்லை என்று தெரியவில்லை. தமிழ் தேசியவாத அணிகளைப் பொறுத்தவரை, அவர்கள் தாங்களாக ஒரு நிலைப்பாட்டை எடுத்த பிறகு மற்றைய அணியினர் தங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற வழமையான நடைமுறையின் தொடர்ச்சியாகவே இதை நோக்க வேண்டியிருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியவாத கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்றென்றைக்குமே கானல் நீராகவே இருக்கும் போன்று தெரிகிறது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் தனது கடிதத்தில் ‘ஏக்கியராஜ்ய’ என்ற பதத்தைப் பயன்படுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. 2015 – 2019 காலப்பகுதியில் அன்றைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைக்கு பிறகு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் இலங்கை அரசின் தன்மை ‘ஏக்கியராஜ்ய’ வாக அமையும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கைவிடப்பட்ட இடத்தில் இருந்து அந்த அரசியலமைப்புச் செயன்முறை முன்னெடுக்கப்பட்டு தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அநுர குமார திசநாயக்க 2024 ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதை அடிப்படையாக வைத்துக் கொண்டு கஜேந்திரகுமார் ‘ஏக்கிய ராஜ்ய’ அரசியலமைப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வந்துவிடும் என்று நம்புகிறார் போலும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதைக் குறிப்பிட்ட ஜனாதிபதி திசநாயக்க பிறகு கடந்த ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக பதிய அரசியலமைப்பு குறித்து எதையும் பேசவில்லை. மூன்று வருடங்களுக்கு பிறகு அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்று பதவிக்கு வந்த ஆரம்பக் கட்டத்தில் கூறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது அதைப் பற்றி பெருமளவுக்கு மௌனத்தைச் சாதிக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு குறித்து அண்மையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய புதிய அரசியலைமைப்பின் மூலமாக மாத்திரமே ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்று கூறினார். ஆனாலும், அவர் காலவரையறை எதையும் கூறவில்லை. இலங்கையில் நிலைவரம் இவ்வாறு இருக்கும்போது தமிழ்நாடு முதலமைச்சர் இலங்கையில் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் செயன்முறைகள் துரிதப்படுத்தப்படுவதாக கூறியிருக்கிறார். அதனால், இலங்கை அரசியல் நிலைவரம் தொடர்பான ஸ்ராலினின் புரிதல் குறித்து சந்தேகம் எழுகிறது.

எது எவ்வாறிருந்தாலும், இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து மீண்டும் அவர் அக்கறை காண்பிக்க தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. அதே வேளை, தமிழ்நாடு சட்டசபை தேர்தல்கள் நெருங்கும் நிலையில், தனது மாநிலத்தின் மற்றைய அரசியல் கட்சிகள் இலங்கை தமிழர் பிரச்சினையை கையிலெடுப்பதற்கு முன்னதாக பிரதமருக்கு கடிதம் எழுதியதன் மூலம் ஸ்ராலின் முந்திக் கொண்டார் என்ற விமர்சனமும் உண்டு.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலம் இருக்கின்ற போதிலும், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு கிடைத்த வாய்ப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரயம் செய்கிறது என்ற அபிப்பிராயம் தற்போது அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்று நீண்டகாலமாக குரல்கொடுத்து வந்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசியலமைப்பு சீர்திருத்தங்களை தாமதமின்றி முன்னெடுத்திருக்க வேண்டும் என்பதே பரந்தளவில் சிவில் சமூக அமைப்புக்களின் கருத்தாக இருக்கிறது. புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கு சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்கத்தின் பதவிக் காலத்தின் முதல் வருடங்களே பாதுகாப்பான காலப் பகுதியாகும்.

அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து உற்சாகமான பிரதிபலிப்பு வெளிப்படாமல் இருப்பது அரசியலமைப்பு ரீதியான அல்லது ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிறுவும் திசையில் அது நகரத் தொடங்கியிருக்கிறது என்ற விமர்சனம் ஏற்கெனவே எதிரணியினால் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் முன்னணி அரசறிவியல் நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஒரு வருட ஆட்சி குறித்து அண்மையில் எழுதிய ஆய்வு ஒன்றில் இந்த அரசியலமைப்பு மாற்ற விவகாரம் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்’

இலங்கையின் அரசியல் புதிய வருடத்திலும் அதற்கு பின்னரும் பெரும்பாலும் மிகவும் சர்ச்சைக்குரியதாகவும் பதற்றம் நிறைந்ததாகவும் இருக்கப் போகிறது என்பதற்கான சகல அறிகுறிகளும் தெரிகிறது. முக்கியமான எந்தவொரு அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கும் இது உண்மையில் நல்ல செய்தி அல்ல.

# வடக்கில் இருந்து தெற்குக்கான அநுரவின் செய்தி?

ஜனாதிபதி அனுர தனது வடக்குக்கான வருகையின் போது வடக்கு மக்கள் எதிர்பார்த்த அல்லது விரும்பும் செய்திகள் எவற்றையும் கூறாது அவர்கள் எதிர்பாராத ஆனால் தெற்கு மக்களுக்கு விருப்பமான செய்திகளைச் சொல்லிச் சென்றுள்ளார். இதன் மூலம் வடக்குக்கும் தெற்குக்கும் தவிர்க்க முடியாத வகையில் அவர் தனது உண்மையான முகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இன்று தெற்கில் அனுரவுக்கு எதிரான கருத்து நிலை திட்டமிட்டரீதியில் வளர்க்கப்பட்டு வருகிறது. இதில் பிக்குகள் முன்னிலை வகிக்கின்றனர். அதனால் பௌத்த பீடங்களையும் பிக்குகளையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுவிட்டது. இதற்காரணமாகவே கல்விச் சீர்திருத்தம் தொடக்கம் பல விடயங்கள் கைவாங்கப்படுகின்றன.

இதற்கான அடிப்படைக்காரணம் இனவாதமற்ற, மதவாதமற்றவர்கள் என அவர்கள் போட்டுக் கொண்ட வேடமும் அதற்காக இதுவரை அடக்கி வாசிக்கப்பட்டமையும் ஆகும். அவர்களின் இந்த வேடத்தை வடக்கு மட்டுமல்ல தெற்கும்கூடச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால் தெற்கில் அனுர தரப்புக்கு ஏற்பட்டுவரும் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கு போட்ட வேடத்தைக் கலைப்பதைத் தவிர வேறுவழியில்லை. அதுவும் வடக்கிலிருந்து சொல்லப்படுவதே மிகப்பொருத்தமானது என்பது அனுரவின் முடிவு.

தையிட்டியின் வரலாற்று முக்கியம், அது தென் பகுதி பௌத்தர்களின் வழிபாட்டுக்கான முக்கியம், அதற்கெதிரான போராட்டம் இனவாத அரசியல் நோக்கமுடையது என்று கூறி அதன் ஆக்கிரப்பையும், இருப்பையும் நியாயப்படுத்துவதன் மூலம் தன்னைப் பௌத்தத்தின் காவலன் என பௌத்த பீடங்களுக்கு உறுதியளிக்கிறார்.

தற்போது தெற்கு அரசாங்கத்தை தமது அரசாங்கம் என்று தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்டு



விட்டதால் அவர்களுக்கென்று அதிகாரப் பரவலாக்கமோ, மாகாண சபையோ எதுவும் அவசியமில்லை என்று தமது உண்மையான நிலைப்பாட்டை மறைமுகமாகக் கூறி ஐயமுற்றிருந்த தெற்கு கடும்போக்குவாதிகளையும் திருப்திப் படுத்துகிறார்.

அத்துடன் நின்று விடாது உள்ளக விளையாட்டு அரங்கத்துக்கான இடத்தை மாற்றுமாறு கோருவதையும் அரசியலாகப் பார்ப்பதுடன் பலாலி விமான நிலையம்,காங்கேசன் துறைமுகம் என்பன இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்கான தெனத் தெற்குக்குச் சொல்லப்படுகிறது. எனினும் இதனைத் தெற்குத் தெரிந்து கொண்டும் தெரியாதது போல நடிக்கும். வடக்கு தெரிய மனமில்லாமலே நடக்கும்.

–கந்தையா அருந்தவபாலன்

# திருகோணமலை புத்தர் சிலை வழக்கில் 4 பிக்குகளுக்கும் விளக்கமறியல் நீடிப்பு!



திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான வழக்கில் கஸ்ஸப தேரர் உட்பட நான்கு பௌத்த பிக்குகளை எதிர்வரும் ஜனவரி 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. வழக்கு விசாரணையை 19 ஜனவரி 2026 பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இதன் போது இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படாத நிலையில் வழக்கினை பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்தி வைப்பதாக நீதவான் உத்தரவிட்டிருந்தார்

இந்த விவகாரம் தொடர்பாக, ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பௌத்த மதகுருமார்களும், ஏனைய பொது மக்களும் பலத்த பாதுகாப்புடன் இன்றைய வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப் பட்டனர்.

வழக்கு விசாரணையின் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, பௌத்த மதச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் எனப் பெருமளவிலானோர் நீதிமன்ற வளாகத்தில் சமூகமளித்திருந்தனர். இதன் காரணமாக நீதிமன்றச் சூழலில் பெரும் பரபரப்பான சூழல் நிலவியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நீதிமன்றத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் குவிக்கப் பட்டு தீவிர கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக் கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க நவீன பிரபாகரன்களான கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் அதற்கு மறைமுக ஆதரவு வழங்கும் அரச தரப்பு என்பவற்றிடம் இருந்து திருகோணமலை கடற்கரையில் வைக்கப்பட்ட புத்தர் சிலையை பாதுகாக்க நாம் போராடுகின்றோம் என்று திருகோணமலையில் வைத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

2004இல் திருகோணமலை நகர மத்தியில் வைக்கப் பட்ட புத்தர்சிலையை பாதுகாக்க பிரபாகரனுடன் போரிட்டு அதனை பாதுகாத்தோம். புத்தர் சிலைகளை பாதுகாக்க நாங்கள் எப்போதும் போராடுவோம்' என்றார்.

திருகோணமலை டச்பே கடற்கரையில் 2025 நவம்பர் 16 மாதம் வைக்கப்பட்ட புத்தர்சிலை தொடர்பிலான வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை (19) எடுத்து கொள்ளப்பட்டது. வழக்கை பார்வையிட்ட பின்னர் சரத் வீரசேகர நீதிமன்றத்திற்கு வெளியில் ஊடகங்களை சந்தித்த போதே மேற்கண்ட கருத்தை கூறினார்.

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் ஏனைய சில அமைச்சர்களும் பௌத்த சமயத்தையும்,பௌத்த சாசனத்தையும் தொடர்ந்து அவமதித்து வருகின்றனர். இதற்கு மேலாக தற்போது பௌத்த பிக்குகளை கைது செய்து சிறையில் வைத்துள்ளனர். இவ்வாறு இவர்கள் தொடர்ந்து பௌத்தத்திற்கு எதிராக செயற்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என்றார்.

இதே வேளை வழக்கு நடவடிக்கைகளை பார்வையிடுவதற்காக கிழக்கு மாகாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா ஜெகம்பதி, மத்திய மாகாண முன்னாள் ஆளுநர், மிகிந்தலை விகாரையின் நாயக்க தேரர் மற்றும் அதிக எண்ணிக்கையான தேரர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் திருகோணமலைக்கு வருகை தந்திருந்தனர்.

## ஏன் முழுநாடும் ஒன்றாக இல்லை

முழு நாடும் ஒன்றாக என்னும் பெயரில் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆரம்பித்து வைத்திருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் வைத்து இதனை ஆரம்பித்து வைத்திருப்பதன் மூலம் அவர் ஒரு செய்தியை மறைமுகமாகத் தெரிவித்திருக்கின்றார்.

ஒன்றில் இதனை அவர் அறிந்து செய்தாரா அல்லது அறியாமல் செய்தாரா என்பது அவருக்கு மட்டுமே தெரிந்தது. அவர் மேடையில் இருக்கின்ற போது தமிழ் கட்சிகளின் தலைவர்களை தாக்கிப் பேசிய அமைச்சர் சந்திரசேகரனும் ஏனைய தேசிய மக்கள் சக்தியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிச்சயமாக இதனை அறிந்திருக்கப் போவதில்லை.

ஆனால் சிந்தித்திருந்தால் இதனை கண்டு பிடிப்பது கடினமான ஒன்றுமல்ல. முழு நாடு ஒன்றாக' என்னும் வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் வைத்து ஆரம்பித்து வைத்திருப்பதன் ஊடாக வெளிப்பட்டிருக்கும் செய்தி,

இப்போது நாடு ஒன்றாக இல்லை. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் என்ன தான் வாக்களித்திருந்தாலும் கூட அவர்கள் தங்களை இலங்கையர்களாக உணரவில்லை. எனவே அவர்களை இலங்கையர்களாக உணச் செய்ய வேண்டும் என்று அநுரகுமார திஸாநாயக்க முயற்சிக்கின்றார்.

இதன் காரணமாகத்தான் யாழ்ப்பாணத்தில் வைத்து இவ்வாறானதொரு திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றார். காலத்திற்கு காலம் கொழும்பின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை நோக்கி வருவதும் கவர்ச்சிகரமான அறிவிப்புக்களை மேற்கொள்வதும் சாதாரணமான ஒன்றுதான். ஆனால் அவ்வாறான அறிவிப்புக்களுக்கு அமைவாக முன்னேற்றங்கள் நடந்திருக்கின்றதா என்பதுது தான் கேள்வி.

முழு நாட்டையும் ஒன்றாக கொண்டு வர வேண்டும் என்பது நல்ல திட்டம் அவசியமான திட்டமும் கூட. ஆனால் தமிழ் மக்களை இலங்கையர்களாக உணர முடியாதளவிற்கு தடுக்கின்ற காரணிகள் என்ன என்பதை அறிந்து, அதனை நிவர்த்தி செய்கின்ற போது தானே தமிழ் மக்கள் தங்களை ஒரு நாட்டின் மக்கள் எனறு உணர்கின்ற நிலைமை ஏற்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மரியாதையான பார்வையுண்டு. ஆனால் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் அவ்வாறான மரியாதையான பார்வை இருப்பதாகக் கூறி விட முடியாது.

ஏனெனில் அநுர என்னும் ஒருவர் தான் ஜே.வி.பியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் முகம். அவருக்கு பதிலாக மக்களிடம் வரக் கூடிய முகங்கள் இல்லை. இந்த நிலையில் தன் மீது மரியாதை யும் நம்பிக்கையும் கொண்டு வாக்களித்த தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி என்ன செய்யப் போகின்றார் என்பது தான் கேள்வி.

தமிழ் அரசியல்வாதிகளை, அவரது அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் திட்டுவதன் மூலம் பிரச்னைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. இதனைத் தான் முன்னைய ஆட்சியாளர்களும் செய்து கொண்டிருந்தனர். விடயம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஜனாதிபதி எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகின்றார்? இன்று வரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி வாய் திறக்கவில்லை?

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் வாய் திறக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு விதமாக பேசுகின்றனர் ஆனால் முழு நாட்டையும் ஒரு நாடாக்குவதற்காக கனவு காணும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதுவும் கூறவில்லை.

இந்த இடம் தான் சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றது? ஏன் ஜனாதிபதி தொடர்ந்தும் சில விடயங்கள் பற்றி பேச அச்சப்படுகின்றார்? சில விடங்கள் தொடர்பில் வெளிப்படையாக பேசுவதற்கு அச்சப்படும் சூழலில் எவ்வாறு முழு நாட்டையும் ஒன்றுபடுத்த முடியும்?

# இலங்கையின் கட்டுமானத் துறையில் 20ஆயிரம் ஊழியர்களுக்குத் தட்டுப்பாடு? இந்தியா, பங்காளதேஷில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வர அரசு அனுமதி!



இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மெல்ல மீண்டு வரும் நிலையில், நாட்டின் கட்டுமானத் துறையானது பாரிய ஆளணிப் பற்றாக்குறையை எதிர் கொண்டுள்ளது. 2026 ஆம் ஆண்டில் மட்டும் இத்துறையில் சுமார் 20,000 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், நிலைமையைச் சமாளிக்க வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்த முக்கிய கட்டுமான நிறுவனங்கள் அரசிடம் அனுமதி கோரியுள்ளன.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் குமுது லால் போகஹவத்தை கொழும்பில் ஊடகங்களுக்குத் தெரிவித்த தகவலின்படி, தற்போது கட்டுமானத் துறையில் உடனடித் தேவையாக 10,000 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அண்மையில் வீசிய 'டிட்வா' சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், கட்டுமானப் பணிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால், இந்த ஆண்டு இறுதிக்குள் பற்றாக்குறை 20,000 ஆக உயரும் அபாயம் உள்ளது.

இலங்கையின் பொருளாதாரச் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட நிபுணர்களின் வெளியேற்றம் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஆண்டு தோறும் சுமார் 1,400 பொறியாளர்கள் படித்து வெளியேறினாலும், அவர்களில் மிகச்ச் சிலரே நாட்டில் தங்குகின்றனர். பெரும்பாலனவர்கள் வெளிநாடுகளுக்குச்சென்று விடுகிறார்கள் என அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார். பொறியாளர்கள் மட்டுமல்லாது, கொத்தனார்கள், கம்பி வளைப்பவர்கள் போன்ற திறன்சார் தொழிலாளர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

உள்ளூர் ஆளணியைக் கொண்டு இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாத நிலையில், முன்னணி கட்டுமான நிறுவனங்கள் சுமார் 7,500 வெளிநாட்டுத் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வர அனுமதி கோரியுள்ளன. ஏற்கனவே இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து பல தொழிலாளர்கள் இலங்கையின் கட்டுமானத் தளங்களில் பணி புரிந்து வருகின்றனர். சட்டரீதியாக இவர்களின் வருகையைத் தடுக்க நாங்கள் விரும்பவில்லை என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் அதிகளவில் இருந்த போதிலும், சமூக அந்தஸ்து மற்றும் கௌரவம் கருதி அவர்கள் கட்டுமானத் துறைக்கு வரத் தயங்குவதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். வேலையில்லாத இளைஞர்கள் பலர் உள்ளனர், மறுபுறம் கட்டுமானத் துறையில் வேலைகள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் இவை இரண்டும் இணையாத ஒரு முரண்பாடு நிலவுகிறது என்று போகஹவத்தை குறிப்பிட்டார்.

இதனை மாற்றியமைக்க, தேசிய தொழில் தகுதி சான்றிதழ்களை வழங்கி இத்தொழிலுக்கான சமூக அங்கீகாரத்தை உயர்த்தவும், உள்ளூர் இளைஞர்களுக்குப் போதிய பயிற்சியளித்து எதிர்காலத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்குப் பதிலாக அவர்களைப் பணியிலமர்த்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரச் சரிவின் போது, வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டதாலும், கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தாலும் இத்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பல கட்டடப் பணிகள் பாதியில் கைவிடப்பட்டன, தொழிலாளர்கள் கிராமங்களுக்குத் திரும்பினர் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றனர். தற்போது பொருளாதாரம் சற்றே ஸ்திரமடைந்து வருவதால் பணிகள் மீண்டும் சூடு பிடித்துள்ளன, ஆனால் அதற்கேற்ற பணியாளர்கள் இல்லாதது இத்துறையின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக மாறியுள்ளது.

## இலங்கையில் விவசாயத்தில் முதலீடு செய்ய சீனா தயார்

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருவதாகச் சீன வர்த்தக சபை தெரிவித்துள்ளது. பயன்படுத்தப்படாதுள்ள காணிகளைப் பயன்படுத்தி பாரிய அளவிலான பால் உற்பத்திப் பண்ணைகள் மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட மரக்கறி, பழங்கள் போன்ற விவசாய உற்பத்திகளை மேற்கொள்வது அவர்களின் நோக்கமாக உள்ளது.

இதன்போது காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான தற்போது பயன்படுத்தப்படாதுள்ள காணிகளை இதற்காகப் பயன்படுத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. விவசாயம், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்தவிற்கும் சீன வர்த்தக சபையின் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையில் சந்திப்பின் போது அவர்கள் இந்த முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# அநுரவின் காட்சி அரசியலும் இலங்கையின் மாயாஜாலமும்!

**கட்டுரையாளர்:- பனங்காட்டான்**



தேர்தல் காலங்களில் தமிழர் தாயகத்தில் ரஜினிகாந்தாக மேடைகளில் தோன்றிய அநுரகுமர இப்போது காட்சி அரசியல் செய்து செல்பிகளின் நாயகராகியுள்ளார். தமது பதவிக் காலம் முடிந்து அமெரிக்கா திரும்பும் அந்நாட்டின் தூதுவர் ஜூலி சங் இலங்கையில் உண்மையில் மாயாஜாலம் உள்ளதென்று கூறியுள்ளார். இது யாரைக் குறிக்கிறது?

தமிழ் நாட்காட்டியில் தை மாதம் பிறக்கும் போது தை பிறந்தால் வழி பிறக்கும் என்று தமிழர்கள் நம்பிக்கை கொள்வது வழக்கம். இதனை வாழ்த்தாகவும் கூறிக்கொள்வர்.

பெரும்புயல் சீற்றத்தில் பேரழிவைக் கண்ட தீவு அதிலிருந்து மீள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் எடுத்து வருகிறது. சர்வதேசம் தாராளமாக அள்ளிக் கொடுக்கிறது.

தைப்பொங்கல் தமிழருக்கான பெருநாள் என்பதை முன்வைத்து வட பகுதிக்கு தமது விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமர இங்கு அம்மண்ணின் மைந்தனாகத் தம்மை காட்டிக்கொண்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார். ஆனால் தை பிறந்தும் தையிட்டி மக்களுக்கு எந்த விடிவும் கிடைக்கவில்லை. மக்களுக்காக போராடிய மக்கள் சிலர் நீதிமன்ற படிகளில் ஏற்றப்பட்டுள்ளனர்.

அநுர குமரவின் வடபகுதி விஜயத்தின் எதிர்பார்ப்புகள்இ வாக்குறுதிகள மக்கள் வழங்கிய வரவேற்பு ஆகியவைகளுக்குள் செல்வதற்கு முன்னர் இவர் தலைமையிலான ஆட்சியின் அரசியற் செயற்பாடுகளை கவனிக்க வேண்டும். இவர்களது பிரதமர் ஹரிணி அமரசூரியவை மையப்படுத்தி விரிக்கப்பட்டுள்ள வலை சற்று தொய்ந்து காணப்படுகிறது.

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்படவிருந்த புதிய கல்வித்திட்டத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த எதிரணியினர் பாடப் புத்தகத்தில் திட்டமிட்டு நுழைக்கப்பட்ட பாலியல் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தி ஆட்சியை அலுப்புத்தட்ட வைக்க அங்கலாய்க்கின்றனர். ஏற்கனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட விமல் வீரவன்ச உதய கம்மன்பில போன்றவர்கள் தங்களை மீண்டும் மேடையேற்ற இதனை வாய்ப்பாக்குகின்றனர். ஆசிரிய சங்கங்கள் போர்க்கொடி தூக்கி நிற்கின்றன. பௌத்த பிக்குகளும் இதற்குள் இழுத்து விடப்பட்டுள்ளனர்.

மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் போக்கில் புதிய பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதை அரசு ஒரு வருடத்துக்கு பின் போட்டுள்ளது. எனினும் இதற்குப் பொறுப்பாகவுள்ள கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கையை எதிரணியினர் கைவிடவில்லை. இதே கோரிக்கையுடன் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த விமல் வீரவன்ச தம்மால் தான் பாடத்திட்டம் பின்போடப்பட்டதாகக் கூறி சத்தியாக்கிரகத்தை (இப்படிக் கூறுவதே பொருத்தமாகத் தெரியவில்லை) கைவிட்டார். நீதிமன்ற வழக்கொன்றுக்கு அன்று செல்லாவிட்டால் பிடியாணை பிறப்பிக்கப்படுமென்ற அச்சத்தினாலேயே இவர் சத்தியாக்கிரகத்தை கைவிட்டதாக ஆட்சித் தரப்பினர் விமர்சித்து வருகின்றனர்.

ஹரிணி அமரசூரிய மீதான நம்பிக்கையீன பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 22ம் 23ம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. இரு தரப்பினரும் மாறி மாறி தாக்குதல் நடத்துவதற்கு தயாராகி வருகின்றனர். இதற்கிடையில் ஹரிணி எந்தப் பதவியிலிருந்தும் நீக்கப்படமாட்டாரென்றும் அமைச்சரவை மாற்றமெதுவும் கிடையாதென்றும் அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

ஆனாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைவிடும் நிலையில் எதிரணிகள் இல்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல தமிழ் கட்சிகளும் ஹரிணிக்கு ஆதரவாக நிற்கின்றன. இதற்காக அவர்களுக்கு நன்றி கூறுவதைப் போன்று அலரி மாளிகையில் பல்வேறு மதத்தலைவர்களையும் அழைத்து பொங்கல் விழாவை ஹரிணி அமரசூரிய கோலாகலமாக செய்து காட்டியுள்ளார்.

அண்மைய நாட்களில் இவரைப் போன்று ஊடகங்களில் இன்னொரு முக்கிய பெண்மணி முக்கியத்துவம் பெற்றிருக்கிறார். நான்கு வருடங்கள் இலங்கையில் அமெரிக்காவின் தூதுவராகக் கடமையாற்றி விட்டு கடந்த 16ம் திகதி தமது நாட்டுக்குத் திரும்பியிருக்கும் ஜூலி சங் தமது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்புவதற்கு முன்னர் சில முன்னாள் ஜனாதிபதிகள் தற்போதைய ஜனாதிபதி உட்பட பல முக்கியஸ்தர்களை நேரில் சந்தித்து பிரியாவிடை பெற்ற பின்னர் தமது எக்ஸ் தளத்தில் ஒரு கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் தங்கள் புருவத்தை உயர்த்தும் வகையில் இவரது வாசகம் அமைந்துள்ளது. இலங்கையில் உண்மையிலேயே மாயாஜாலம் உள்ளது என்பது இந்த வாசகம். There is something truly magical about Sri Lanka என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நிறுத்தாது இனி என்ன நடக்கப் போகிறது என்பதில் நம்பிக்கை கொள்கிறேன் என்றும் புரிந்து கொள்ள முடியாத நடையில் பதிவிட்டுள்ளார்.

மாயாஜாலம் உள்ளது என்று இவர் குறிப்பிட்டது எதுவாக இருக்கலாம் என்பது அவரவர் கற்பனைக்கும் சர்ச்சைக்கும் உரியது. காலிமுகத்திடலில் இடம் பெற்ற அறகலைய போராட்டத்தின் இயக்குனராக இவரே இயங்கியதாக அப்போது பெருமளவில் பேசப்பட்டது. அறகலைய போராட்டக்காரர்களுக்கு காலிமுகத்திடலுக்கு அருகிலிருந்த ஹோட்டலிலிருந்து இரவு பகலாக சுவையான உணவுகள் விநியோகிக்கப்பட்டதற்கும் இவரே ஏற்பாடு செய்ததாக சில ஊடகங்களில் எழுதப்பட்டும் இருந்தது.

அப்படியென்றால் கோதபாய நாட்டை விட்டு தப்பியோடி பதவி துறந்தது மகிந்த ராஜபக்ச பதவி இறக்கப்பட்டு இரவோடிரவாக ஹெலியில் கொழும்பை விட்டுப் பறந்தது ராஜபச்சக்கள் கூண்டோடு அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டது ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி ஜனாதிபதியானது ஜே.வி.பி.யின் அடையாளமான தேசிய மக்கள் சக்தி கடந்த மூன்று தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்று ஜனாதிபதியாகவும்இ நாடாளுமன்றமாகவும்இ உள்ளாட்சிச் சபைகளைக் கைப்பற்றியதும் என்று எதனை இவர் மாயாஜாலம் எனக் குறிப்பிட்டார் என்பது இதுவரை எவருக்கும் புரியவில்லை. அந்தகன் யானையைத் தடவிய கதையாக மாயாஜாலக் கதை நீண்டகாலத்துக்கு தொடரும் சாத்தியமுண்டு.

அநுரகுமரவின் வடபகுதிக்கான விஜயம் சற்று நோக்கப்பட வேண்டியது. கடந்த மூன்று தேர்தல் காலத்திலும் தமிழ் பகுதிகளுக்கு இவர் மேற்கொண்ட விஜயங்களுக்கும் இந்த விஜயத்துக்கும் வேறுபாடு காணப்படவில்லை. மழையோ வெய்யிலோ புக முடியாத அலங்காரக் கூடாரங்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆசனங்களில் அமர்த்திருந்தனர். வேலணை ஆலயம் ஒன்றின் முன்றலில் பொங்கல் பானையில் இவரே அரிசியிட்டு தைப்பொங்கலை ஆரம்பித்து வைத்தார். மூத்தோர் இளையோர் என ஆண் பெண் இருபாலாரும் திரண்டிருந்தனர். தமிழர் பாரம்பரிய முறைப்படி அநுர குமர வரவேற்கப்பட்டார். நடன நங்கைகள் மலர்ந்த முகத்துடன் அவரது கரத்தை இறுக்கிப்பிடித்த ஒளிப்படங்கள் இணையங்களில் பரவிக்கிடக்கின்றன. செல்பி எடுத்தவர்கள் இன்னொரு தொகையினர்.

யாழ்ப்பாண நாகவிகாராதிபதியும் நயினாதீவு விகாராதிபதியும் இவரது கைகளில் மந்திரிக்கப்பட்ட நூல்களை கட்டி வாழ்த்தினர். மறந்தும் கூட தமிழர் பிரச்சனை தீர்வு பற்றி எதுவும் கூறவில்லை. தமது அரசின் சில செயற்திட்டங்களை வழமையான பாணியில் எடுத்துக் கூறி கைதட்டலை பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் தமக்கு எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை மக்களே எனது கவசம் என்பதைக் காட்டுவதைப் போல பொதுவீதியொன்றில் அரைக்காற்சட்டையுடன் நடைப்பயிற்சி செய்த காட்சி பிரபலமாகியுள்ளது. இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டும் சீருடையில் இவர் அருகில் செல்வதாகக் காட்டப்பட்டது.

இன்னொரு ஒளிப்படம் இவர் உணவருந்துவது. தரையில் தடுக்கொன்றில் சப்பாணி கட்டி வேட்டியுடன் அமர்ந்தவாறு தலைவாழையிலையில் வைக்கப்பட்டிருந்த மூங்கில் குழல் பிட்டை குழம்புக் கறியுடன் கைகளால் பிசைந்து அவர் சாப்பிடும் காட்சி இந்த விஜயத்தின் கிளைமாக்ஸ். தமிழ் சினிமாவில் ரஜினிகாந்த் சிம்பிளாக வந்து எம்மவரில் ஒருவராக காட்சி கொடுத்து பிரபல்யமானது போல அநுர குமரவின் இம்முறை விஜயம் நன்கு திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இதனை இவரது காட்சி அரசியல் என்று குறிப்பிட்டால் தவறிருக்காது. இதன் அறுவடையைப் பொறுத்தே வெற்றியைக்காண சில காலம் பொறுத்திருக்க வேண்டும்.

சாவகச்சேரி தொகுதியிலுள்ள மீசாலை என்ற இடத்தில் அமைந்துள்ள பாடசாலை வளவில் குடும்ப வீடமைப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இளங்குமரனின் தொகுதி இதுவென்று சொல்லப்படுகிறது. தமிழரசுக் கட்சி சுமந்திரனின் வலது கரமான சயந்தனின் தொகுதியும் இது தான். அதனால் தான் இந்த இடத்தை அநுர தரப்பினர் தெரிவு செய்திருக்கலாம் என்று வதந்தியும் உண்டு.

இத்தொகுதியிலுள்ள நாவற்குழி என்ற இடத்தில் 1980களில் பிரதமராகவிருந்த பிரேமதாச (சஜித்தின் தந்தை) கம் உதாவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பெருமளவு வீடுகளை நிர்மாணித்தார். 1983 யூலை இனஅழிப்பின் பின்னர் இராணுவத்தினரின் குடியிருப்பாக இது மாற்றமடைந்தது. இப்போது பௌத்த விகாரையுடன் சிங்கள மக்களின் குடியேற்றத் திட்டமாகியுள்ளது. மீசாலை வீடமைப்புத் திட்டமும் அவ்வாறு மாற்றம் பெறாதிருக்கப் பார்த்துக் கொள்வது தமிழ்த் தேசிய கட்சியினர் என்று கூறிக் கொள்பவர்களின் பாரிய கடமை.

அநுர குமரவின் வடபகுதி விஜயத்தை தமிழரசுக் கட்சி புறக்கணித்தது. இது கட்சியின் முடிவு என சுமந்திரன் முதலில் அறிவித்திருந்தார். கட்சிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையெனவும் தவிசாளர்களுக்கு மட்டும் அழைப்பு வந்ததாகவும் அதனை அவர்கள் பகிஸ்கரித்துவிடடதாகவும் பின்னர் சொன்னார்.

இவரை பதில் செயலாளராக்குவதற்காக தமது பதவியை இராஜினாமா செய்த சத்தியலிங்கம் வேறொரு விளக்கம் கொடுத்துள்ளார். ஜனாதிபதியின் மீது தாங்கள் நம்பிக்கை வைத்திருப்பதாகவும் முன்னையவர்கள் போல இவரிடம் கொடூர முகம் இல்லையெனவும் இவரது வருகை பற்றி தாங்கள் அறிந்திருந்ததாகவும் ஆனால் தங்களுக்கு அழைப்பு வரவில்லையென்றும்

(22ம் பக்கம் பார்க்க)

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 ஜனவரி 2026 முதல்23 ஜனவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லத்துரை

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.மத்திய கபே உரிமையாளர் அமரர் திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 23 ஜனவரி 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ.சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 26 ஜனவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். “நல்லதை நினை நடப்பது நடக்கும்”

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 11 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஹீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா (ஹீ) அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 15 ஜனவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுபேந்திரன் முத்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி




### செல்வி பிரசாந்தி அருச்சுனன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது நான்காவது ஆண்டுத் திதி நினைவு நாள் 31 ஜனவரி 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 ஜனவரி 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணலிங்கம் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினீத் சற்குணலிங்கத்தின் 21வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் வினீத் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




10 ஜனவரி 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அம்பி என்று அன்பாக அழைக்கப்படும் திரு வில்வரத்தினம் அம்பிகைபாகன் அவர்களது 45ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 ஜனவரி 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 ஜனவரி 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 ஜனவரி 2026 புதன்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 11 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 ஜனவரி 2026 திங்கட்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருந்த திருமதி சீலா சுகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 ஜனவரி 2026 திங்கட்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருந்த திருமதி சீலா சுகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 ஜனவரி 2026 திங்கட்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருந்த திருமதி சீலா சுகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 ஜனவரி 2026 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிறேம்குமார் கலாஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜான் பிறேம்குமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜான் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 ஜனவரி 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் மொன்றியல், ரொறன்ரோவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஸ்ரீ என்று அன்பாக அழைக்கப்படும் திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 ஜனவரி 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 24வது இனிய பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்



### செல்வன்

### சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி வசந்த குமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சயனின் 25வது இனிய பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2026 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.

அகவை இருபத்திஐந்து காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# வடக்கு கிழக்கில் இன்னமும் போர்க்கால சூழலே நீடிக்கிறது! ஜனாதிபதியிடம் நயினாதீவு விகாராதிபதி நேரடியாகத் தெரிவிப்பு!



நாட்டில் போர் நிறைவடைந்து 16 ஆண்டுகள் பூரணமாக நிறைவடைந்துள்ள போதும் வடக்கு, கிழக்கில் இன்னமும் போர்க்காலத்தில் காணப்பட்ட சூழலையொத்த நிலைமைகளே நீடிக்கின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வினை உங்களது (ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க) தலைமையிலான அரசாங்கத்தினாலேயே காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என்று நயினாதீவு ரஜமஹா விஹாரை விகாராதிபதி நவதகல பதுமகித்தி திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தையிட்டி விகாரை விவகாரத்துக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படுவதன் ஊடாகவும், தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அவர்களிடத்தில் மீளக் கையளிப்பதன் ஊடாகவும் கணிசமான பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண முடியும் என்றும் நவதகல பதுமகித்தி திஸ்ஸ தேரர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அண்மையில் நயினாதீவு ரஜமஹா விஹாரைக்குச் சென்று, விகாராதிபதி நவதகல பதுமகித்தி திஸ்ஸ தேரரைச் சந்தித்து உரையாடியதோடு அவரிடத்தில் ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான உரையாடல் பற்றி அவர் தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன ரீதியான பதற்றத்தையும், குரோதங்களையும் ஏற்படுத்திய போர் நிறைவடைந்து 16ஆண்டுகளாகின்றன. எனினும் வடக்கு கிழக்கு பகுதிகள் இன்னமும் போர்க் காலத்தில் காணப்பட்ட புறச் சூழல்களே நீடித்துக்கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை வழங்கி இந்த நாட்டில் நிரந்தரமான சமாதானமும், நல்லிணக்கமும் மிக்க சகவாழ்வு ஏற்பட வேண்டும். அதற்காகவே உங்கள் (ஜனாதிபதி அநுரகுமார) தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

அந்தப் பணியை உங்களுடைய அரசாங்கத்தினால் தான் நிறைவேற்ற முடியும். வேறு யாராலும் அந்தப் பணியை முன்னெடுக்க முடியாது. ஆகவே அந்த விடயத்தில் கணிசமான காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தற்போது, வடக்கில் தையிட்டி விகாரைப் பிரச்சினை மிகவும் உக்கிரமடைந்துள்ளது என்பதை அறிவீர்கள். இந்த விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்ட போது, நான் நேரில் சென்று பார்வையிட்டேன். அது தவறாக தனியார் காணியில் அடிக்கல் நட்டப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டினேன். எனினும் அந்த விகாராதிபதி செவிசாய்திருக்கவில்லை.

அதன் பின்னர் குறித்த விகாரையை அமைக்கும் பணிகளில் இராணுவத்தினர் பங்கேற்றிருந்தார்கள். அச்சமயத்தில் நான் நேரடியாக இராணுவத் தலைமையகத்திற்குச் சென்று ஜெனரல் சவேந்திர சில்வாவைச் சந்தித்து தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்படுகின்ற நிலங்கள் தனியாருக்கு உரியவை. நாக விகாரைக்கு சொந்தமான நிலங்கள் அருகில் உள்ளன. அவற்றை வழங்குகின்றேன் அதில் விகாரையை அமையுங்கள் என்றும் எடுத்துரைத்தேன். ஆனால் எந்தவிதமான நன்மைகளும் ஏற்படவில்லை.

திட்டமிட்டபடி குறித்த காணியிலேயே திஸ்ஸ விகாரை இராணுவத்தினரால் அமைக்கப்பட்டது. தற்போது அந்த விகாரையால் வடக்கில் இன,மத ரீதியான பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கின்றது. பௌத்த மதத்தில் எங்கும் ஆக்கிரமிப்புச் செய்து விகாரைகளை அமைக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. மக்களின் மனங்களை காயப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படவில்லை. தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. அவை திருத்தப்பட வேண்டும். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் தமிழ் மக்களின் பல காணிகள் வடக்கிலும் கிழக்கிலும் விடுவிக்கப்படாத நிலைமைகள் உள்ளன. அந்தக் காணிகளை அவர்களிடத்தில் கையளிப்பதன் ஊடாக பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்பது எனது நிலைப்பாடாகும். அந்த விடயத்தில் அரசாங்கம் அதிகமான அக்கறை கொள்ளவேண்டும்.

நயினாதீவில் போர்க் காலத்திலிருந்து நான் இருக்கின்றேன். தமிழ் மக்களுடன் சுமூகமான உறவுகள் உள்ளன. எனக்கும் அவர்களுக்கும் எந்தப் பிரச்சினைகளும் காணப்படவில்லை.

ஆகவே இன,மத ரீதியாக பிரச்சினைகள் போரின் பின்னரும் நீடிப்பதற்கு இடமளிக்காதீர்கள். இது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான, நிரந்தரமான சமாதனத்தை தோற்றுவிப்பதற்கான பயணத்தில் பெரும் பாதகமான நிலைமைகளை உருவாக்கும் ஆபத்தைக் கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக் கூறினேன்.

அப்போது, ஜனாதிபதி அநுரகுமார, எனது கருத்துக்களை ஏற்றுக் கொண்டதோடு, தென்னிலங்கையிலும், வட இலங்கையிலும் இன,மத ரீதியான வேறுபாடுகளை குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்தும் போக்கு இன்னமும் உள்ளதென்பதையும் தையிட்டி விடயம் உட்பட தமிழ் மக்களின் காணி விடுப்பு மற்றும் ஏனைய விகாரங்களில் தனது கரிசனைகள் உள்ள என்றும் அவற்றை படிப்படியான நடவடிக்கைள் ஊடாக முடிவுக்கு கொண்டு வருவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவரது வார்த்தைகள் நம்பிக்கை அளிப்பதாக உள்ள நிலையில் வடக்கில் அவர் முன்னெடுக்கின்ற செயற்பாடுகளுக்கு தெற்கில் ஏற்படுகின்ற எதிர்ப்புக்கள் மிகப்பெரும் சவால்களை தோற்றுவிக்கின்றன என்ற யார்த்தத்தையும் நாம் புரிந்து கொண்டு அவதானமாக விடயங்களை கையாளுமாறு கோரினேன் என்றார்.

## அமெரிக்கா கிறீன்லாந்தைக் கட்டுப்படுத்தும்

(14ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால், டென்மார்க் அரசு நடத்த திட்டமிட்டுள்ள இறையாண்மையை உறுதிப்படுத்தும் பயிற்சிகளில் கூடுதல் கனடிய படைகளை அனுப்பலாமா என்பதையும் பிரதமர் கார்னி தீவிரமாக ஆய்வு செய்து வருகிறார். இந்த பயிற்சிகளில் கிரீன்லாந்தின் முக்கிய கட்டமைப்புகளை பாதுகாப்பதற்கான ஒத்திகைகளும் இடம்பெறக்கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

டிரம்ப் நிர்வாகத்தின் எதிர்வினை மற்றும் அரசியல் விளைவுகளை கருத்தில் கொண்டு, கனடா அரசு எந்த திசையில் முடிவு எடுக்கும் என்பது இன்னும் தெளிவில்லை என அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தேவைப்பட்டால் சிறிய அளவிலான கனடிய படைப்பிரிவை இந்த வார இறுதிக்குள் கிரீன்லாந்துக்கு விமானம் மூலம் அனுப்ப முடியும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஊடகசாலையில் அறுபது ஆண்டுகள்
# வற்றாது வாழும் இளமை

கண்டம் விட்டு கண்டம் சென்ற வேளையிலும் உலகளாவிய ஊடக சாலையில் தமக்கென ஒரு தனியிடத்தை உருவாக்கி அறுபது ஆண்டுகள் தாண் டியும் அறாத்தொடராக பயணித்துக் கொண்டிருப்பவர் கனடாவில் வாழும் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள்.

திரு என்றும், எஸ் தி என்றும் ஊடகங்களில் நன்கறியப்பட்ட இவர் 2025 அக்டோபரில் ஊடகத்துறையில் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் 1965ம் ஆண்டு இவரது ஊடகப்பயணம் ஆரம்பமானது. ஈழநாடுவின் நாடாளுமன்ற மற்றும் அப்போதைய செனட் சபை ஆகியவற்றின் செய்தியாளராக கொழும்பில் கடமை யாற்றிய பின்னர் லேக்ஹவுஸ் ஊடக நிறுவனத்தின் தினகரன் ஆசிரிய பீடத்தில் இணையும் வாய்ப்பு இவ ரைத் தேடிவந்தது.

இவரது ஊடக வாழ்வின் பொற்காலமாக தினகரன் பணிக்காலம் அமைந்தது. இங்கும் நாடாளுமன்ற செய்தியாளராகவும், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பிரதானிகளின் விஜயங்களின் போது அவர்களுடன் செல்லும் ஊடகர்கள் குழுவில் முக்கியமானவராகவும் இடம்பெற்றார்.

1969ல் பிரதமர் டட்லிசேனநாயக்கவின் வடபகுதி ஐந்துநாள் விவசாய சுற்றுலா, 1974ல் பிரதமர் சிறி மாவோ பண்டாரநாயக்கவின் யாழ்ப்பாணம் பல்க லைக்கழக திறப்புவிழாவுடன் இணைந்த யாழ். மாவட்ட ஒருவார அபிவிருத்தித்திட்ட சுற்றுலா, கொழும்பிலிருந்து நாவலர் பெருமானின் உருவச் சிலை ஊர்வலமாக யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்ட வரலாற்று நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சரித்திர பூர்வ தமிழாராய்ச்சி மாநாடு ஆகியவற்றில் முக்கிய செய்தியாளராக பங்குபற்றியமை இவரது ஊடகப்பயணத்தின் முத்திரைஅனுபவங்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கில செய்திப்பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருந்த சமகாலத்தில் அதன் தமிழ்ச் சேவையில் அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் செயற்பட்டார்.

1983 ஜூலையில் தென்னிலங்கையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பினால் தமது வாழ்விடம், சொத்துகள், நூற்தேட்டம் அத்தனை யையும் இழந்து தமது மனைவியுடனும் மகனுடனும் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிய இவரது ஊடகப் பயணத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது. கொழும்பு றோயல் கல்லூரியில் கல்விகற்ற மகன் அகிலனுக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் அனுமதி கிடைக்க, மனைவி றஞ்சிக்கு யாழ்ப்பாணம் சென்.பொஸ்கோ பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. இவ்வே ளையில் யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்ப டவிருந்த ஈழமுரசு தினசரியின் பிரதம ஆசிரியர் பதவி இவரை நாடிவந்தது.

இரு மனநிலையில் தடுமாறிய பின்னர், 1983 செப்டம்பரில் ஈழமுரசை பொறுப்பேற்று வாரப்பத்திரிகையாக ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தின் இரண்டாவது தினசரியா கபிறப்பெடுத்த ஈழமுரசு அன்றைய காலத்தின் தேவைகருதியும் வாசகர்களின் வரவேற்பினாலும் அடுத்த சில மாதங்களில் தினசரியாகியது. ஈழமுரசு பத்திரிகையின் தினசரிமற்றும் வாரமலர் ஆகியவற்றின் ஸ்தாபக ஆசிரியராகவும், பிரதம ஆசிரியராகவும் அமைந்து பத்திரிகையை வளர்த்தெடுப்பதில் கூடிய கவனம் செலுத்திய இவர், இதற்கு இயைவாக இளவயதினரை செய்திப் பிரிவுக்கு தெரிந்தெடுத்து ஊடகப்பயிற்சி வழங்கினார்.

ஊடக முதலாளிமாருக்கும் தொழில்முறை ஊடகர்களுக்கும் நீண்டகாலம் ஒத்துப்போக முடியாதென்ற நிதர்சனம் திருச்செல்வம் அவர்களுக்கு 1986 ஆகஸ்டில் ஏற்பட்டது. இதனால் போதிய முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு செப்டம்பர் மாதத்தில் இங்கிருந்து வெளியேறினார். தம்முடன் பணியாற்றிய பெருமளவானவர்கள் அடுத்த சில நாட்களில் ஈழமுரசிலிருந்து வெளியேறியதால் புதிய தினசரி ஒன்றை வெளியிடவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாயிற்று. முரசொலி தினசரியின் பிறப்பின் வரலாறு இது.

இங்கும் நூற்றுக்குநூறு வீதம் செய்திப்பிரிவுக்கு இளையவர்களையே உள்வாங்கி பயிற்சியளித்தார்.




ஈழமுரசில் முன்னர் பணியாற்றிய பாரதி இராஜநாயகம், கிறிஸ்டி றஞ்சன், ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோரோடு மேலும் பிறேம் சிவகுரு (தற்போது ஐபிசியில் பணியாற்றுபவர்), துஸ்யந்தன் துரைராஜா, எட்வேர்ட் லியோன், வாசகன் இரத்தினதுரை, நிமலராஜன் மயில்வாகனம், ராஜ்மோகன் செல்லையா ஆகிய இளையோர் முரசொலி செய்திப்பிரிவில் இணைக்கப்பட்டனர். இவர்களுள் காலமான இருவர் தவிர மற்றையோர் இன்று உலகின் பல பாகங்களில் முரசொலி பண்ணையில் உருவானவர்கள் என்ற பெயருடன் ஊடகங்களில் சிறப்பாக பணியாற்றி வருவது இவருக்குப் பெருமை தருவது.

திருதிருச்செல்வம் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தபோது, குறுநாவல், சிறுகதை, கவிதைப் போட்டிகளை நடத்தி எழுத்தாளர்களுக்கு பணப்பரிசு வழங்கி ஊக்கமளித்தார். தினசரி பத்திரிகையில் குறுநாவல்களை தொடர்ச்சியாக வெளியிட்டு அவற்றை நூலாக்கினார். எழுத்தாளர்கள் கே.ஆர். டேவிட் அவர்களின் 'ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை', தெணியான் அவர்களின் 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' ஆகிய இரண்டு நூல்களும் இதில் முக்கியமானவை.

1980களின் நடுப்பகுதியில் மாற்றமடைந்த போர்ச் சூழலும், தியாகிதிலீபனின் உண்ணாநோன்பும், அமைதிப்படை என்ற பெயரில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தின் கொடூரமுகத்தை தமிழ் மக்கள் அடையாளம் காணமுடிந்தது. இதில் முதல் பலியானது ஊடகங்கள். 1987 அக்டோபர் 10ம் திகதி முரசொலி அலுவலகம் இவர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. அடுத்த கட்ட நடவடிக்கையாக முரசொலி ஆசிரியராக இருந்த இவர் காரணம் ஏதுமின்றி கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் கோட்டை சிறைச்சாலையில் இந்திய இராணு வகைதியாக 82நாட்கள் அடைத்து வைக்கப்பட்டு மனநிலை ரீதியான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்.

எனினும், இவர் தமது ஊடக பயணத்தை அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. பத்து மாதங்களின் பின்னர் மீண்டும் தமது குழுவினரின் பூரண ஒத்துழைப்போடு முரசொலியை வெளியிட ஆரம்பித்தார். குண்டுத்தகர்ப்பு, சிறைத்தண்டனை எதிலும் பயனில்லை என்பதை உணர்ந்த இந்திய இராணுவமும் அவர்களது ஒட்டுக்குழுவினரும் இவரைக் கொலை செய்ய முடிவெடுத்தனர். 1989ம் மேமாதம் 10ம் திகதி இதற்கான நாள் குறிக்கப்பட்டது. அன்று காலை இவரது வீடு அமைந்திருந்த பிரதேசத்தை இந்திய இராணு வம் சுற்றிவளைத்து தமது கட்டுப்பாட்டில் வைத்தி ருக்க, ஒட்டுக்குழுவினர் நால்வர் இவரது வீடு சென்று கொலை முயற்சியை மேற்கொண்டனர்.

சமயோசிதமாக இவர் தப்பிவிட, இவரது ஒரே பிள்ளையான அகிலனை அவர்கள் துப்பாக்கிக்கு இரையாக்கினர். பல்கலைக்கழக புகுமுகவகுப்பு மாணவரான அகிலன் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி, விளையாட்டு, சமூகப்பணி ஆகியவற்றில் முன்னணியில் திகழ்ந்ததோடு மாணவர் தலைவனாகவும் இருந்தவர். அகிலனின் மரணத்தைத் தொடர்ந்து தமது பாதுகாப்பு கருதி திருச்செல்வம் தம்பதியினர் வேறு வழிகளால் கொழும்பைச் சென்றடைந்தனர். கொழும்பின் ஆங்கில, தமிழ், சிங்கள பத்திரிகைகள் அகிலனின் கொலையை கண்டித்து ஆசிரிய தலையங்கங்கள் எழுதின. இலண்டன் பிபிசி ஆங்கிலத்திலும் தமிழிலும் திருச்செல்வத்துடனான செவ்வியை ஒலிபரப்பியது.

அகிலனின் மரணத்தின் 14ம் நாள் திருச்செல்வம் அவர்களின் தந்தையாழ்ப்பாணத்தில் காலமானது இவருக்குத் தெரியாமலே இறுதிச் சடங்குகள் முடிவுற்றன. நான்கு நாட்களுக்குப் பின்னரே தகவல் இவருக்குக் கிடைத்தது.

இவ்வேளையில் சர்வதேச மன்னிப்புச்சபை இவரையும் மனைவியையும் இலங்கையிலிருந்து பாதுகாப்பாக வெளியே கொண்டுசெல்லும் ஏற்பாடுகளை மேற்கொண்டது. அனைத்துலக ஊடக அமைப்பான 'பென்' (PEN) இதற்கு முழு அனுசரணை வழங்கியது. இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இவர்களுக்கு அடைக்கலம் வழங்க முன்வந்தன.

1989 ஜூன் மாதத்தில் திருச்செல்வமும் அவரது மனைவியும் கனடிய கடவுச்சீட்டில் அந்நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சென்ற இவர்கள் இருவரும் முப்பத்தைந்து ஆண்டுகள் தாண்டியும் தங்கள் தாயகம் திரும்பாது அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த முப்பத்தைந்து ஆண்டு காலம் இவரது ஊடக வாழ்வின் மூன்றாவது கட்டமாகப் பார்க்கப்படுகிறது. 1991ல் தமிழர் தகவல் என்ற மாத சஞ்சிகையை ஆரம் பித்து தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இன்றுவரை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார். அகிலனின் ஞாபகார்த்தமாக அவர் பிறந்த 5ம் திகதி யில் மாதாந்தம் இச்சஞ்சிகை வெளிவருவது குறிப்பி டத்தக்கது. ஒவ்வொரு வருடமும் உலகளாவிய படைப்புகளைத் தாங்கிய ஆண்டுமலர் வெளியிடப் படுகிறது. இதனோடு இணைந்ததாக தமிழர் தகவல் விருதுவிழா 1992ம் ஆண்டிலிருந்து கனடாவில் இடம் பெற்று வருகிறது. இதுவரை 300 வரையான பிரமுகர் கள் கல்வி, கலை, இலக்கியம், தன்னார்வத் தொண்டு, ஊடகப்பணி, சமூகப்பணி, ஆன்மிகப்பணி, வாழ்நாள் சாதனை ஆகியவைகளுக்காக விருதுகளும் தங்கப்பதக்கங்களும் வழங்கி மாண்பேற்றப்பட்டுள்ளனர்.

தமிழர் தகவல் ஆண்டு மலர்கள் வரலாற்றைப் பதிவாக்கி, பதிவை வரலாறாக்கி வருகின்றன. இதனை ஆவணப் பொக்கிசம் என்று பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன் எப்போதும் கூறுவார். தமிழர் தகவல் இதழ்கள் தமிழர் வாழும் நாடுகளிலும் இலங்கையிலும் நூலகங்களில் பேணிப் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

கடந்த மூன்றுதசாப்தங்களாக உலகளாவியரீதியிலானவானொலிகள்,தொலைக்காட்சிகளில் அரசியல் ஆய்வாளராக பங்காற்றிவரும் திருதிருச்செல்வம், கனடா, இலங்கை உட்பட பல பத்திரிகைகளில் பல்வேறு பெயர்களில் தொடர்ச்சியாக அரசியல் கட்டுரைகளையும், பத்திகளையும் எழுதிவருகிறார்.

இவரது ஐம்பது ஆண்டுகால ஊடகப் பணியை குறிக்கும் வகையில் ஐம்பது பிரமுகர்களின் காத்திரமான படைப்புகளைத் தாங்கிய 'ஊடகத்திரு எஸ்தி 50' என்ற நூல் 2015ல் கனடாவிலும் இங்கிலாந்திலும் வெளியிடப்பெற்றது.

1998ம் ஆண்டு கனடிய பலவின ஊடக அமைப்பு இவருக்கு ஆளுமை ஊடகவியலாளர் விருது வழங்கி சிறப்பித்தது. 2001ல் சர்வதேசதொண்டர் ஆண்டையொட்டி ரொறன்ரோ நகர முதல்வரினதும், ஒன்ராறியோ அரசாங்கத்தினதும் சிறப்பு விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டது. 2007ம் ஆண்டு ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் 'குடிவரவாளர் சாம்பியன்' விருதினை அறிமுகம் செய்தபோது முதலாவது ஆண்டிலேயே அவ்விருதினைப் பெற்றவர் இவர். கனடாவின் பிரபல எழுத்தாளரும், ஊடகவியலாளருமான 'ஜூன் கால்வூட்' ஞாபகார்த்தமாக பிரஜாவுரிமை அமைச்சு வழங்கியஅதியுயர் சேவைவிருது 2012ம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது, 2019ம் ஆண்டில் கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டம் இவரது அரை நூற்றாண்டுக்கும் மேலான ஊடகப்பணிக்காக சிறப்பு விருது வழங்கியது. தமிழர் தகவலின் முப்பத்தைந்து ஆண்டுகால வெளியீட்டுப் பணியை மதித்து கனடா திருமறை கலாமன்றம் 2025ல் கலைத்தூது விருது வழங்கிமதிப்பளித்தது.

# அமெரிக்கா கிறீன்லாந்தைக் கட்டுப்படுத்தும் வரை உலகம் பாதுகாப்பாக இருக்காது - ட்ரம்ப் சூளுரை!



அமெரிக்கா கிரீன்லாந்தைக் கட்டுப்படுத்தும் வரை உலகம் பாதுகாப்பாக இருக்காது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மேலும், நோபல் அமைதி பரிசு தமக்கு நிராகரிக்கப்பட்டதன் பின்னர், இனி அமைதியைப் பற்றி பரப்புரை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்தை கைப்பற்றும் தனது நோக்கங்களை மீண்டும் வெளிப்படையாக அறிவித்துள்ளார். இதன் ஒரு பகுதியாக தனது கோரிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஐரோப்பிய நாடுகளின் மீது கூடுதல் சுங்க வரிகளை விதிப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். குறிப்பாக கிரீன்லாந்து மீது சீனா மற்றும் ரஷ்யா ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் கிரீன்லாந்தைக் கைப்பற்ற வன்முறையைப் பயன்படுத்துவாரா என்பது குறித்து ட்ரம்ப் தெளிவான பதிலை வழங்கவில்லை. டென்மார்க்குடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் இதுவரை எந்தப் பலனையும் அளிக்கவில்லை என்பதே தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் என அவர் கூறியுள்ளார். கிரீன்லாந்து மீது இராணுவ நடவடிக்கை சாத்தியமா என்ற கேள்விக்கும் அவர் பதிலளிக்க மறுத்துள்ளார்.

அத்துடன் கிரீன்லாந்து விவகாரத்தில் தலையிடுவதற்குப் பதிலாக, ஐரோப்பிய நாடுகள் உக்ரைன் விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய நாடுகள் மற்றும் நேட்டோ கூட்டாளிகளிடமிருந்து கடும் எதிர்ப்பு இருந்த போதிலும் கிரீன்லாந்தை ஏதேனும் ஒரு வழியில் கைப்பற்றுவோம் என்ற மிரட்டல்களை ட்ரம்ப் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறார். கிரீன்லாந்து மீதான அமெரிக்காவின் கட்டுப்பாடு தொடர்பாக ஒப்பந்தம் எட்டப்படும் வரை, டென்மார்க் மற்றும் மேலும் ஏழு ஐரோப்பிய நாடுகளின் மீது 10 சதவீத சுங்க வரி விதிக்கப்படும் என அவர் கடந்த சனிக்கிழமை அறிவித்தார்.

மேலும் நோபல் அமைதி பரிசு நிராகரிக்கப்பட்ட பின்னரே தாம் உலக விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியதாகவும், இனி அமைதியைப் பற்றி பேச வேண்டிய கட்டாயம் இல்லை என்பதை உணர்ந்ததாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில், நோர்வே மீதும் 10 சதவீத சுங்க வரி விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவுடனான முரண்பாடுகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்–ஃப்ரெடெரிக் நீல்சன் தெரிவித்துள்ளார். டொனால்ட் ட்ரம்ப் கிரீன்லாந்தை கைப்பற்றும் விருப்பம் குறித்து வெளியிட்ட கருத்துகள் தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிரீன்லாந்தின் ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கு எதிரான சுங்க வரி மிரட்டல்கள் காரணமாக, அமெரிக்கா ஐரோப்பா உறவுகளில் பதற்றம் நிலவி வருவதாகவும் அவர் கூறினார். இருப்பினும் இந்த அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம் எனவும், உரையாடல், பரஸ்பர மரியாதை மற்றும் சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் உறுதியாக நிற்போம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், பல நாடுகள் மற்றும் உலகத் தலைவர்கள் கிரீன்லாந்துக்கு ஆதரவு தெரிவித்து வருவது மிகவும் முக்கியமானதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இது, கிரீன்லாந்து ஒரு ஜனநாயக சமூகமாகவும், தன் எதிர்காலம் குறித்து தானே முடிவெடுக்க உரிமை கொண்ட நாடாகவும் இருப்பதற்கான தெளிவான அங்கீகாரம் என அவர் தெரிவித்தார்.

இதனிடையே கிரீன்லாந்திலும் டென்மார்க்கிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் வலுவான மற்றும் மரியாதைக்குரிய ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளதாகவும், பலர் அமைதியான முறையில் தங்கள் நாட்டின் மீது கொண்ட அன்பையும் ஜனநாயகத்திற்கான மரியாதையையும் வெளிப்படுத்தியுள்ளதாகவும் கிரீன்லாந்து பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.



## சீனா அச்சுறுத்தல் என்ற பெயரில் அரசியல் இலாபம் தேடும் அமெரிக்கா

கிரீன்லாந்துக்கு சீனா அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்கா முன்வைத்து வரும் குற்றச் சாட்டுகளை சீனா கடுமையாக மறுத்துள்ளது. இந்த விவகாரத்தில் சீனா அச்சுறுத்தல் என்ற சொற்றொடரை பயன்படுத்தி அமெரிக்கா தன்னிச்சையான சுயலாபங்களை அடைய முயற்சிப்பதாக சீன அரசு குற்றம் சாட்டியுள்ளது.

பீஜிங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குவோ ஜியாகுன் இந்த விடயத்தைத் தெரிவித்தார். சீனா அச்சுறுத்தல் என்ற பெயரை ஒரு காரணமாகக் கொண்டு தங்களின் அரசியல் மற்றும் இராணுவ இலக்குகளை முன்னெடுக்க அமெரிக்கா முயற்சிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இந்த கண்டனம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட நீண்ட பதிவைத் தொடர்ந்து வெளியாகியுள்ளது. அந்த பதிவில், ஆர்க்டிக் பிராந்தியத்தில் சீனா மற்றும் ரஷ்யா ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளவும், வட அமெரிக்காவை கண்டம் விட்டு கண்டம் தாண்டும் ஏவுகணை தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கவும் கோல்டன் டோம் என அழைக்கப்படும் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க அமெரிக்காவுக்கு கிரீன்லாந்து அவசியம் என ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த சீன வெளிவிவகார பேச்சாளர், கிரீன்லாந்து தொடர்பான சீனாவின் நிலைப்பாடு ஏற்கனவே பல தடவைகள் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார். ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் நோக்கங்களும் கொள்கைகளும் அடிப்படையாகக் கொண்ட சர்வதேச சட்டமே இன்றைய உலக ஒழுங்கின் அடித்தளமாக இருப்பதாகவும், அந்தச் சட்டங்களை அனைத்து நாடுகளும் மதித்து பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், ஆர்க்டிக் பிராந்தியத்தில் அமைதி, நிலைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பை பேணுவது சர்வதேச சமூகத்தின் பொது பொறுப்பாகும் எனவும், மோதல்களை தூண்டும் வகையிலான குற்றச்சாட்டுகள் உலக அமைதிக்கு பாதகமாக அமையும் எனவும் சீனா தெரிவித்துள்ளது.



## ஐரோப்பிய ஒன்றியம் உறுதி

கிரீன்லாந்து மற்றும் டென்மார்க்கின் இறையாண்மையை நிலை நிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் உறுதி பூண்டுள்ளது என்று ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் தெரிவித்தார். நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட், பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், ஜெர்மன் சான்சலர் பிரீட்ரிக் மெர்ஸ் மற்றும் இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி ஆகியோருடன் பேசிய பின்னர் வான் டெர் லேயன் எக்ஸ் தளத்தில் தெரிவித்தார்.

நாங்கள் எப்போதும் எங்கள் மூலோபாய பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்போம் என்று வான் டெர் லேயன் கூறினார். எங்கள் ஐரோப்பிய ஒற்றுமைக்கு ஏற்படும் இந்த சவால்களை நாங்கள் நிலைத் தன்மையுடனும் உறுதியுடனும் எதிர் கொள்வோம் என்றார்.



## கனடா படைகளை அனுப்ப ஆலோசனை

நேட்டோ கூட்டாளிகளுடன் இணைந்து கிரீன்லாந்தில் இராணுவ பயிற்சிகளில் பங்கேற்க கனடிய படைகளை அனுப்புவது குறித்து கனடா பிரதமர் மார்க் கார்னி பரிசீலித்து வருகிறார்.

கிரீன்லாந்தை அமெரிக்கா வாங்கி கட்டுப்பாட்டில் எடுக்க அனுமதிக்கா விட்டால் ஐரோப்பிய நாடுகளுக்கு சுங்க வரி விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ள நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் அவசரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக, கனடாவின் இரு மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது ராயல் கனடிய விமானப்படை ஏற்கனவே முன் திட்டமிடப்பட்ட நொராட் பயிற்சியின் ஒரு பகுதியாக கிரீன்லாந்தில் பங்கேற்று வருகிறது.(12ம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தை நொதிக்கச் செய்தல்:- தமிழக நீக்கம் & தமிழ்த் தேசிய நீக்கம்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் ஈழத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கடிதம் எழுதியுள்ளார். இலங்கையில் கொண்டு வரப்படும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கருத்தில் கொண்டு இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை பாதுகாத்திட உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி எழுதப்பட்ட அக்கடிதத்தில் 1985இல் முன்வைக்கப்பட்ட திம்புக் கோட்பாடுகளின் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டு வரப்படும் எந்த ஒரு புதிய அரசியலமைப்பும் அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும் என்றும் இது மீண்டும் மோதல்களுக்கும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்றும் முதலமைச்சர் ஸ்டாலின் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழ் நாட்டு முதலமைச்சர் அவ்வாறு பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியமை என்பது தமிழ் தேசிய பேரவையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கடந்த மாதம் மேற்கொண்ட தமிழக விஜயத்தின் விளைவு என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியாவை மீறி இலங்கை இனப் பிரச்சினைக்கு எந்தவோர் வெளியேரசோ அல்லது பன்னாட்டு நிறுவனமோ தீர்வை தர முடியாது என்பதற்கு கடந்த 42 ஆண்டுகள் சான்று.

இந்திய மத்திய அரசை அசைக்க வேண்டும் என்றால் தமிழகம் நொதிக்க வேண்டும் என்பது அடிப்படை விதி. எனவே இந்தியாவை கையாள்வது என்பது ஈழத்தமிழ் நோக்கு நிலையில் முதலில் தமிழகத்தை வெற்றிகரமாக கையாள்வது தான். மிகக்குறிப்பாக கட்சி பேதங்களைக் கடந்து தமிழகத்தை கையாள்வது தான். தமிழ்நாட்டில் 8 கோடி தமிழர்கள் இருக்கத்தக்கதாக ஈழத் தமிழர்கள் அனாதைகளாக கை விடப்பட்டிருக்கும் ஒரு நிலைமை காணப்படுகிறது என்று அண்மையில் கஜேந்திரக்குமார் ஆற்றிய உரை ஒன்றில் தெரிவித்திருந்தார். கடந்த 13 ஆம் தேதி நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடந்த ஒரு அரசியல் கருத்தரங்கில் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

ஆனால் இந்தியாவைக் கையாள வேண்டும் என்று கூறிய விமர்சகர்களையும் செயற்பாட்டாளர்களையும் சிறுமைப்படுத்திய ஒரு கட்சியின் தலைவர், இப்பொழுது இந்தியாவைக் கையாள வேண்டும் தமிழகத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருப்பது திருப்பகரமான மாற்றம் தான். ஆனால் இந்த மாற்றம் ஏற்படுவதற்கிடையில் கடந்த 16 ஆண்டுகளுக்குள் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன? அந்த மாற்றங்களின் விளைவாக தமிழ்த் தேசிய அரசியலானது அதன் பேர பலத்தை இழந்து வருகிறது. அனைத்துலக அளவிலும் அது பலமாக இல்லை உள்நாட்டிலும் பலமாக இல்லை. அதன் விளைவாக தனக்கு தமிழ் மக்களின் ஆணை உண்டு என்று கூறும் தேசிய மக்கள் கட்சி அரசாங்கமானது தான் விரும்பிய ஒரு தீர்வை தமிழ் மக்களின் மீது திணிக்க கூடிய ஆபத்து அதிகமாக உள்ள ஒரு காலகட்டம் இது என்பதை தனது மேற்படி மேற்படி உரையில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார்.

அதாவது ஈழத் தமிழர்கள் ராஜதந்திரத்தை கற்றுக் கொள்வதற்கிடையில் தாயகத்தில் தமிழ் மக்கள் தமது பேர சக்தியை பெருமளவுக்கு இழந்து விட்டார்கள் என்பதுதான குரூரமான கள யதார்த்தம் ஆகும். இந்த யதார்த்தத்தின் பின்னணியில் தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை தமிழகத்தைக் கையாள்வது என்ற முடிவை எடுத்திருக்கிறது. ஆனால் ஒப்பீட்டளவில் அதிகளவு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியானது அவ்வாறான முடிவை எடுத்திருக்கிறதா?

சிறீதரன் தமிழகத்தை நோக்கித் தொடர்ச்சியாகச் சென்று வந்திருக்கிறார். அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுமந்திரன் போயிருக்கிறார். சாணக்கியன் போயிருக்கிறார். ஆனால் இவர்கள் தமிழகத்தில் உள்ள கட்சிகளின் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் பெருமளவுக்கு சந்தித்ததில்லை. அல்லது அவ்வாறு



தமிழகத் தலைவர்களை சந்திக்க வேண்டும் என்ற கொள்கை முடிவின் அடிப்படையில் கட்சியின் தூதுக்குழு ஒன்று தமிழகத்திற்குச் செல்லவில்லை. தமிழகத்தை நீக்கும் ஓர் அரசியல் அணுகுமுறை தமிழரசுக் கட்சியிடம் இருந்தது என்ற பொருள்பட திவ்ய ஜீவனத்தில் நடந்த கருத்தரங்கில் கஜேந்திரக்குமார் உரையாற்றினார். நாடாளுமன்றத்தில் இப்போதுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் பெரும்பாலானவர்கள் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்து தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டவர்கள்.அவர்கள் தங்களுடைய வாக்குறுதிகளை மீறிப் போகாமல் இருப்பதற்கு தமிழகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பொருள் கொள்ளத்தக்க விதத்தில் கஜனின் உரை அமைந்திருந்தது.

இனப்பிரச்சினைக்கு ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட தீர்வைப் பெறுவதற்கு தமிழகம் தேவையில்லை. இதை கஜனின் வார்த்தைகளில் சொன்னால், தமிழ்த் தேசிய நீக்கம் செய்ய விரும்பும் சக்திகளுக்குத் தமிழகம் தேவையில்லை. தமிழ்த் தேசிய நீக்கம் என்பது இனப்பிரச்சினை அரசியலைப் பொறுத்தவரை தமிழக நீக்கமும் தான்.

கடந்த 16 ஆண்டுகளில் குறிப்பாக சம்பந்தரின் காலத்தில் அவரிடம் இனப் பிரச்சினையை அனைத்துலக மய நீக்கம் செய்யும் ஒரு கொள்கை முடிவு இருந்தது. வெளித்தரப்புகளின் அழுத்தமானது சிங்கள மக்களை பயமுறுத்துவது. அதனால் உள்நாட்டுத்தீர்வு ஒன்றைப் பெற முடியாது என்றும் சம்பந்தர் நம்பினார்.

ஆனால் இனப்பிரச்சினை எனப்படுவது சாராம்சத்தில் ஓர் அனைத்துலக பிரச்சினை தான். அதற்கு அனைத்துலக தீர்வு தான் உண்டு என்ற மிக அடிப்படையான ஓர் உண்மையை சமன்பாட்டை சம்பந்தர் விளங்கிக் கொள்ளவே இல்லை. அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை. நிலை மாறு கால நீதியின் கீழான யாப்புருவாக்க முயற்சிகளில் அவருடைய நடவடிக்கைகள் அதை நிரூபித்தன. அந்த நடவடிக்கைகளை அவர் முழுக்க முழுக்க நம்பினார்.அந்த நம்பிக்கையினால்தான் அவர் ஒவ்வொரு நல்ல நாள் பெருநாளுக்கும் தீர்வு வரும் என்று தீர்க்க தரிசனம் உரைத்தார்.

ஆனால் மூன்றாவது தரப்பொன்றின் அழுத்தம் இல்லாமல் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரு தீர்வுக்கு வர முடியாது என்ற கசப்பான யதார்த்தம் அவருடைய முகத்தில் அறைந்த பொழுது ஒரு தோல்வியுற்ற தலைவராக அவர் இறந்தார். அவருடைய யாப்புருவாக்க முயற்சியின் பங்காளிகளில் ஒருவராகிய மைத்திரியே அந்த முயற்சியை காட்டிக் கொடுத்தார். ஏனென்றால் மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தமோ கண்காணிப்போ அங்கே இருக்கவில்லை. நிலைமாறு கால நீதியின் கீழ் ஐநாவின் மனித உரிமைகள் பேரவையானது அவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடிய ஒரு தரப்பாக இருக்கவில்லை. எனவே ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வை பெறுவதற்கான தமிழ்த் தேசிய நீக்க அரசியல் என்பது அதன் நடைமுறை அர்த்தத்தில் தமிழக நீக்கமும் தான்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்டு ஒரு நாடாளுமன்றம் தரக்கூடிய எந்த ஒரு தீர்வும் வெளிப்படையான சமஸ்டியாக இருக்காது என்பதே கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலான அனுபவம். அதை இன்னொரு விதமாகச் சொன்னால் தன்னை "சமஷ்டிக் கட்சி'' என்று அழைத்துக் கொள்ளும் தமிழரசுக் கட்சியின் அனுபவம் என்றும் கூறலாம்.

எனவே இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத்துக்கு ஊடாக கிடைக்கும் எந்த ஒரு தீர்வும் அப்படித் தான் இருக்கும். நாடாளுமன்றத்துக்கு வெளியே மூன்றாவது தரப்பொன்றின் அழுத்தம் இருக்க வேண்டும். அவ்வாறு மூன்றாவது தரப்பு ஒன்றும் அழுத்தம் இருந்த காரணத்தால் தான் இந்திய இலங்கை உடன்படிக்கை சாத்தியமாகியது. ரணில்– பிரபாகரன் உடன்படிக்கை சாத்தியமாகியது.

மூன்றாவது தரப்பு உள்ளே வர வேண்டும் என்றால் தமிழ் மக்கள் போராட வேண்டும். தமிழ் மக்கள் போராடினால் தான் ஒரு மூன்றாவது தரப்பை தமக்குச் சாதகமாக அரங்கில் இறக்கலாம். தமிழகத்தைக் கையாள்வதற்கும் அதுதான் முன் நிபந்தனை. தமிழ் மக்கள் தாங்கள் கொந்தளிக்காமல், தமிழகம் தங்களுக்காகக் கொந்தளிக்கவில்லை என்று கேட்பது பொருத்தமில்லை. தமிழ்த் தேசிய அரசியலை தமிழ்க் கட்சிகள் நொதிக்க வைக்கவில்லை என்றால் தமிழகம் எப்படி நொதிக்கும்? எனவே முதலில் தமிழ்த் தேசிய பேரவையும் உட்பட தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழரசியலை நொதிக்க வைக்க வேண்டும். பொங்கல் கொண்டாட்டத்துக்கு வந்த அனுரவோடு செல்பி எடுக்க முண்டியடித்த ஒரு பகுதி தமிழ் மக்களையும் நொதிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பௌர்ணமி நாளும் தையிட்டியில் நொதிப்பதால் மட்டும் தமிழரசியலை தொடர்ச்சியாக நொதிக்க வைக்க முடியாது. அதற்குமப்பால் தமிழ்த் தேசிய அரசியலை தேர்தல் அரசியலுக்கு வெளியே போராட்ட அரசியலாக நொதிக்க வைத்தால் மட்டும் தான் தமிழகம் நொதிக்கும். தமிழகம் நொதித்தால் தான் பிராந்தியம் நொதிக்கும். அப்பொழுது தான் இந்திய மத்திய அரசின் வெளியுறவு முடிவுகளில் அது தாக்கத்தைச் செலுத்தும்.

இந்த ஆண்டு பிறந்தபோது அனைத்துலக அரசியலில் இரண்டு செய்திகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஒன்று,உக்ரைன் பற்றியது. மற்றது, வெனிசுலா பற்றியது. கடந்த மாதம் 15ஆம் திகதி,உக்ரைன் நேட்டோவில் இணைவைதென்ற அதன் முன்னைய முடிவைக் கைவிடுவதாக அறிவித்திருந்தது. உக்ரைன் போர் எனப்படுவது பிராந்திய யதார்த்தத்தை மீறி உக்ரைன் நேட்டோவில் இணைய முற்பட்டதால் ஏற்பட்டது. அது ரஷ்யாவின் பிராந்தியம். ரஷ்யாவின் செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் உக்ரைன் அந்த பிராந்திய யதார்த்தத்தை மீறி நேட்டோவுடன் இணைவது என்று முடிவெடுத்ததன் விளைவு தான் யுத்தம். இப்பொழுது உக்ரைன் பிராந்திய யதார்த்தத்தைச் சுதாகரித்துக் கொண்டிருக்கிறது. உக்ரைனின் முடிவை மாற்றியதில் அமெரிக்காவுக்கும் பங்குண்டு.

இது நடந்து கிட்டத்தட்ட இரு கிழமைகளின் பின் இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா தனது செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் வெனிசுலாவின் மீது தாக்குதல் நடத்தி அதன் அதிபரைக் கைது செய்து கடத்திச் சென்றிருக்கிறது. ஒரு பேரரசின் செல்வாக்கு மண்டலத்துக்குள் வாழும் பலவீனமான ஒரு நாடு அனுபவிக்க கூடிய இறையாண்மை மற்றும் சுதந்திரத்தின் அளவைக் குறிக்கும் ஆகப் பிந்திய உதாரணம் இது. (22ம்பக்கம் பார்க்க

# நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு கலந்தாலோசனை அவசியம்!

கட்டுரையாளர்:
கலாநிதி
-ஜெகான் பெரேரா-



பொது அபிப்பிராயங்களை கருத்தில் எடுக்கத் தொடங்கியிருப்பது அரசாங்கத்தின் நேர்மறையான ஒரு அம்சமாகும். தன்னினச் சேர்க்கை தொடர்பிலான இணையத்தளம் ஒன்றுக்கான தொடுப்பு சேர்க்கப்பட்தாக வெளியிடப்பட்ட தரம் 6 ஆங்கிலபாட நூல் வழிகாட்டி தொடர்பாக மூண்ட சர்ச்சைக்கு அரசாங்கம் பதிலளித்த விதம் மிகவும் ஆக்கபூர்வமானதாக இருந்தது. தவறை விளக்குவதற்கு கடுமையான அக்கறை எடுத்த அரசாங்க தலைவர்கள் ஆங்கிலபாட வழிகாட்டிக்கு உரியதல்ல அந்த இணையத்தளத்



தொடுப்பு அகற்றப்படும் என்று சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் உறுதியளித்தனர். அவர்கள் மதத்தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை சந்தித்து வருகின்றனர்.

பல வருடங்களாக நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை மிகவும் கடுமையாக அருகிப் போயிருந்த ஒரு பின்புலத்தில், அரசாங்கம் இவ்வாறாக பொதுக் கருத்துக்களை செவிமடுத்து பதிலளிப்பது முக்கியமானதாகும். இது பெற்றோர்கள், ஆசிரியர்கள் பாடசாலை முறைமை ஊடாக சமூகத்துக்கு எடுத்துச் செல்லப்படும் விழுமியங்கள் தொடர்பாக அக்கறை கொண்டவர்கள் உட்பட சமூகத்துக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு தனக்கு இருப்பதாக அரசாங்கம் உணருகின்றது என்பதன் அறிகுறியாகும்.

ஆங்கிலப் பாட நூல் வழிகாட்டி தொடர்பிலான இந்த விவகாரம் அரசாங்கத்திற்குள் ஐக்கியத்தை வலுபடுத்தியிருக்கிறது. இடம்பெற்ற தவறுக்கு கல்வியமைச்சராகவும் இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய மீதே முற்று முழுதாக குற்றப் பொறுப்பைச் சுமத்துவதற்கு சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பெண்ணின வெறுப்பாளர்களும் மேற் கொண்ட முயற்சி அவரைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைவர்களை ஒன்றுபட வைத்தது. பிரதமர் விவகாரத்தில் அரசாங்கத்திற்குள் இருக்கின்ற ஜனதா விமுக்தி பெரமுனவின் ( ஜே வி.பி.) பலம் பொருந்திய பிரிவினர் அதிருப்தி கொண்டிருப்பதாக வெளியாகும் ஊகங்களுக்கு மாறானதாக இது அமைகிறது.

மிகவும் முக்கியமாக, முறைமையில் இருக்கக் கூடிய குறைபாடுகளுக்காக அமைச்சர்களை தனிப்பட்ட முறையில் பலிக்கடாவாக்கக் கூடாது என்று அரசாங்கத்திற்குள் இருக்கும் புரிந்துணர்வை இது வெளிக்காட்டுகிறது. பயனுறுதியுடைய ஆட்சிமுறை கூட்டுப் பொறுப்பிலும் தலைவைர்கள் மத்தியிலான ஒருமைப்பாட்டிலுமே தங்கியிருக்கிறது. அதுவும் குறிப்பாக, பொதுச் சர்ச்சைகள் தோன்றுகின்ற வேளைகளில் அத்தகைய ஒருமைப்பாடு இன்றியமையாததாகும்.

பிரதமரின் முக்கியமான பாத்திரம் அவர் சர்வதேச முக்கியஸ்தர்களுடன் நடத்துகின்ற சந்திப்புக்களிலும் மக்கள் மத்தியில் அவர் நிகழ்த்துகின்ற உரைகளிலும் தெளிவாக தெரிகிறது. டித்வா சூறாவளிக்கு பின்னர் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கூட்டத்துக்கு கடந்தவாரம் பிரதமர் தலைமை தாங்கினார். பொது அபிப்பிராயங்களை அரசாங்கம் எந்தளவுக்கு கவனம் செலுத்துகிறது என்பதை செயலணியின் உறுப்பினர்களின் வகையும் தொகையும் ( Comopsition) மீண்டும் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட முன்னைய பொறிமுறைகள் அவற்றின் உறுப்பினர்களாக முற்றிலும் ஆண்களைக் கொண்டவையாகவும் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் இல்லாதவையாகவும் இருந்தன. அவற்றைப் போலன்றி நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணி சிவில் சமூகத்தின் பிரதாநிதிகளும் உட்பட சகல தரப்புகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புக்கள் நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிப்பவையாக இருந்தால் பொது மக்களின் ஏற்புடைமையையும் நியாயப்பாட்டையும் பெருமளவில் கொண்டிருப்பது சாத்தியம்.

## ஜனாதிபதி செயலணி

இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி மீட்சியின் பல்வேறுபட்ட அம்சங்களை கையாளும் எட்டு குழூக்களை மேற்பார்வை செய்கிறது. ஒவ்வொரு குழூவும் அந்தந்த துறை சார்ந்த அமைச்சரின் தலைமையில் அமைந்திருக்கிறது. இந்த குழூக்கள் தேவைகள் மதிப்பீடு, பொது உட்கட்டமைப்புக்களை மீளமைத்தில், வீடமைப்பு, உள்ளூர்ப் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரங்கள், சமூக உட்கட்டமைப்பு, நிதி மற்றும் நிதியளிப்பு, தரவுகள் மற்றும் தகவல் முறைமைகள், பொதுத் தொடர்பாடல் ஆகிய விவகாரங்களில் கவனம் செலுத்துகின்றன. இந்த கட்டமைப்பு அகல்வாரிவானதாகவும் நன்கு திடமிடப்பட்டதாகவும் அமைந்திருக்கிறது.

ஆனால் நிறுவன வடிவமைப்புக்களினால் மாத்திரம் வெற்றி உத்தரவாதப் படுத்தப்படுவதில்லை என்பதை 2004 சுனாமிக்கு பிறகு இலங்கை மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணாகளின் அனுபவம் உணர்த்துகிறது. களத்தில் உள்ளவர்களுடன் இந்த குழூக்கள் எந்தளவுக்கு ஊடாட்டங்களைச் செய்கின்றன என்பதும் பல்வேறு தரப்புகளிடமிருந்து வருகின்ற யோசனைகளை எந்தளவுக்கு ஏற்பதற்கு தயாராக இருக்கின்றன என்பதும் முக்கியமானது.

ஜனாதிபதி செயலணியின் பணிகளுக்கு உரியவை என்று எதிர்பார்க்கப்படும் துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்ட சிவில் சமூகக் குழூகளுடன் பிணைப்புகளை ஏற்படுத்திக்கொள்வது குறித்து பரிசீலனை செய்வது அந்த செயலணிக்கு நல்ல ஒரு தெரிவாக இருக்கலாம். அவசரகால நிவாரணத்துக்கான சிவில் சமூகக் குழூக்களின் கூட்டமைப்பு (CSO Collective for Emergency Relief) செயலணியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற குழூக்களுடன் இணைக்கப்படக்கூடிய பல்வேறு குழூக்களை அமைத்திருக்கின்றது.

அத்தகைய இணைப்புக்கள் அரசாங்கத்தின் அதிகாரத்தை பலவீனப்படுத்தாது. மாறாக நடைமுறை யதார்த்த கொள்கைகளின் மூலமாக அதை பலப்படுத்தும். சமூகங்களை வெறுமனே பயனாளிகளாக மாத்திரம் நோக்காமல் பிரச்சினைகளின் தீர்வில் பங்காளிகளாக நடத்தும் போது பெரும்பாலும் நிலைபேறான தீர்வுகள் கிடைக்கின்றன. அரசும் சிவில் சமூகமும் இணைந்து செயற்படுவதன் மூலமே அத்தகைய தீர்வுகள் சாத்தியமாகும் என்பதை அண்மைய கண்டு பிடிப்புகள் வலியுறுத்துகின்றன.

டித்வா சூறாவளி பௌதீகக் கட்டமைப்புகளுக்கு அப்பால் பெருமளவு அழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. அது சமூகங்களை நிர்மூலம் செய்திருக்கிறது. மண் சரிவுகளினாலும் வெள்ளப் பெருக்கினாலும் சிலர் விழுங்கப்பட்டு விட்ட அதேவேளை, ஏனைய பலர் எதிர்காலத்தில் நிகழக் கூடிய அனர்த்தங்களினால் பாதிக்கப் படக்கூடியவர்கள் என்பதால் அவர்களது வீடுகளில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இடம் பெயர்வின் விளைவான உணர்வதிர்ச்சி வெறுமனே பொருட்களுடன் சம்பந்தப்பட்டதில்ல, சமூக மற்றும் உளவியல் தாக்கங்களையும் கொண்டது. புதிய இடங்களுக்கு சமூகங்களை மாற்றும் போது மிகுந்த அவதானத்துடனான திட்டமிடல் அவசியம். இது வெறுமனே மக்களுக்கு வீடுகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட விடயம் மாத்திரமல்ல சமூகங்களுடன் சேர்ந்து வாழக்கூடியதாகவும் வாழ்வாதாரங்களைப் பெறக் கூடியதாகவும் மக்களை இடம்மாற்றும் செயற்பாடுகள் அமையவேண்டியது அவசியம். அதற்கு இடம் மாற்றப் படுபவர்களுடனான கலந்தாலோசனை முக்கியமானது. சமூகத்தின் சம்மதமின்றி திணிக்கப்படுகின்ற இடம் மாற்றத் திட்டங்கள் பெரும்பாலும் தோல்வி கண்டு விடுகின்றன என்பதை அனர்த்தங்களுக்கு பின்னரான மதிப்பீடுகள் நிரூபித்திருக்கின்றன. அவ்வாறு திணிக்கப்படுகின்ற புதிய குடியேற்றத் திட்டங்களை கைவிட்டு மக்கள் வெளியேறியதுண்டு. அதன் விளவாக புதிய வடிவிலான புறக்கணிப்பு வழி வகுக்கிறது. இன்று கூட 2004 சுனாமியினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.

## மலையகத் தமிழர்கள்

டித்வா சூறாவளியினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட நாட்டின் பாகங்களில் முன்னெடுக்கப்பட வேண்டியவையாக இருக்கும் பெருமளவிலான புனர் நிர்மாணப் பணாகள் மலையகத் தமிழ்ச் சமூகத்தவர்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளை கையாளுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் கொண்டு வருகின்றன.

அண்மைய இந்திய வம்சாவளியினரான இந்த சமூகத்தவர்களான இந்த மக்கள் இலங்கை சுதந்திரமடைந்த நேரத்தில் அநியாயமான முறையில் நடத்தப் பட்டார்கள். குடியுரிமை, நிலவரிமை மற்றும் வாக்குரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது. நீண்டகாலமாகப் புரையோடிப் போய்க் கிடக்கின்ற அவர்களின் பிரச்சினைகள் நாட்டின் மனச்சாட்சி மீதான ஒரு கறை.

மண்சரிவுகளினால் பாதிக்கப்படக்கூடிய மலையகத்தின் அந்த பாகங்களில் வாழ்கின்ற மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான தேவை மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு நீதி செய்வதற்கு கிடைத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பாகும். முன்னர் உத்தேசிக்கப்பட்ட தொடர் மாடிக் குடியிருப்புக்கள் அல்லது இங்கிலாந்துப் பாணியிலான நகர்ப்புற வீடுகள் செலவு மிக்கவை என்பதுடன் கலாசார ரீதியிலும் பொருத்தமற்றவை. சமூக ரீதியாக அந்த மக்களைச் சீர்குலைத்து விடும். தற்போது முன்னாலிருக்கும் பணி வீடுகளைக் கட்டுவதல்ல, சமூகங்களை மீளக்கட்டியெழுப்புவதாகும்.

தங்களது வீடுகளையும் சமூகங்களையும் இழந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான பண்புகளைப் பொறுத்தவரை, அவர்களுடன் கலந்தாலோசிப்பது அவசியமானதாகும். அதே முறையில் கல்விச் சீர்திருத்தங்கள் (ஆங்கிலப்பாட வழிகாட்டி தொடர்பான சர்ச்சை அதில் ஒரு சிறிய பகுதி மாத்திரமே ) தொடர்பிலும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்தாராய வேண்டிய தேவை இருக்கிறது. பேச்சுவார்த்தையை தொடங்குவது என்பது எவருமே தங்களது நிலைப்பாடுகளை அல்லது பண்புகளை (22ம் பக்கம் பார்க்க)

# வடக்கை வெற்றி கொள்வது?

முன்னர் வடமாகாணத்துக்கு தனி ஆட்சி தேவை என்று வடமகாண மக்கள் கூறினார்கள். ஆனால் முதன் முதலாக யாழ் மக்கள் இன்று எங்களுடைய ஆட்சியை தங்களுடைய ஆட்சி என்று நம்புகிறார்கள்..

இது அனுர யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறியது. அவர் அவருடைய பேச்சின் போக்கில் வடக்கு யாழ்ப்பாணம் போன்ற வார்த்தைகளை அவற்றுக்குரிய அரசியல் அடர்த்தி விளங்காமல் கதைத்து விட்டுப் போகிறார் என்று எடுத்துக் கொள்வதா? அல்லது அரசாங்கம் திட்டமிட்டு வடக்கில் தன் கவனத்தைக் குவிக்கிறது என்பதனை இது காட்டுகிறது என்று எடுத்துக்கொள்வதா?

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின் வடக்கிற்கு மிகக்குறுகிய காலத்தில் அதிக தடவை விஜயம் செய்த ஒரே ஜனாதிபதி அனுர தான். அப்படித்தான் அவருடைய அமைச்சர்களும். அரசாங்கம் வடக்கை நோக்கி தன்னுடைய முழுக் கவனத்தையும் குவிப்பதை இது காட்டுகிறது.

இது இயல்பானது அல்ல. ஒப்பிட்டுப் பார்த்தால் இதே அளவு கவனக்குவிப்பு கிழக்கில் இல்லை. வடக்கின் விவகாரங்களைக் கையாள்வதற்கு என்று அமைச்சர் சந்திரசேகரன் நியமிக்கப்பட்டிருக்கிறார். பெரும்பாலான அமைச்சர்கள் அடிக்கடி வடக்குக்கு வருகிறார்கள். அமைச்சர்கள் அல்லது அரச பிரதானிகள் கலந்து கொள்ளும் அரச நிகழ்வுகள் அடிக்கடி வடக்கில் நடக்கின்றன. இவை யாவும் அரசாங்கம் வடக்கை நோக்கி அதன் கவனத்தைத் திட்டமிட்டுக் குவிக்கிறது என்பதைத் தான் காட்டுகின்றன.

பார்க்காத பழகாத எங்களை நம்பினீர்கள். உங்களை நாங்கள் கைவிட மாட்டோம் இதுவும் யாழ்ப்பாணத்தில் வைத்து அண்மையில் ஜனாதிபதி கூறிய வார்த்தைகள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வெற்றியை அவர்களே எதிர்பார்க்கவில்லை என்பதனை அது காட்டுகிறது. அந்த வெற்றியை தொடர்ந்து தக்க வைப்பதற்கும் அடுத்த மாகாண சபையில் அந்த வெற்றியை மேலும் விஸ்தரிப்பதற்கும் திட்டமிட்டு அரசாங்கம் தன் முழுக் கவனத்தையும் வடக்கின் மீது குவிக்கின்றது.

அண்மையில் உத்தியோகப்பற்றற்ற விதமாக கிராமமட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றின்படி தேசிய மக்கள் சக்திக்கு கிட்டத்தட்ட முப்பது விகிதமான வாக்கு வங்கி இருப்பது தெரிய வந்திருக்கிறது. குறிப்பாக கைபேசி செயலிகளின் கைதிகளாகக் காணப்படும் தலைமுறையினர் மத்தியில் அனுரவுக்கு அதிகம் ஆதரவு காணப்படுகிறது. அந்த ஆதரவைத் தக்கவைக்கும் விதத்தில் அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணியானது அனுரவை தொடர்ந்தும் தமிழ்ப் பாடல்களின் பின்னணியில் கதாநாயகராகக் கட்டியெழுப்பி வருகிறது.

தற்பொழுது அதிகம் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் பிரஜா சக்தி என்ற கிராம மட்ட செயல்திட்டமும் அரசாங்கம் அதன் வாக்கு வங்கியை வளர்க்கும் நோக்கிலானது என்று சந்தேகிக்கப்படுகிறது. இதுதொடர்பாக அண்மையில் சுமந்திரன் ஒரு காணொளியில் அரசாங்கத்தை குற்றம் சாட்டுகிறார். அரசாங்கம் அதன் அரச வளங்களை பயன்படுத்தி கிராம மட்டத்தில் பிரஜா சக்தி என்ற கட்டமைப்பை உருவாக்கி வருகிறது. ஆனால் அக்கட்டமைப்பு இறுதியிலும் இறுதியாக தேசிய மக்கள் சக்தி என்ற கட்சிக்கு சேவகம் செய்கின்ற அந்தக் கட்சியின் ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்புகின்ற ஒன்று தான் என்று அண்மையில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன், நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் ஆற்றிய உரை ஒன்றில் தெரிவித்திருந்தார். இது ஏறக்குறைய மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில்.பசில் ராஜபக்ஷவின் பொறுப்பின் கீழ் காணப்பட்ட அரச கட்டமைப்புகளைப் போன்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட ஏழு



வெவ்வேறு அரசு அலுவலர்கள். அரச சேவை என்ற பெயரில் தாமரை மொட்டுக் கட்சிக்காக கிராம மட்டங்களில் வேலை செய்தார்கள் என்பது பின்னர் தெரியவந்தது. அரச வளங்களைப் பயன்படுத்தி, அரச செலவில், அரச காரியம் என்ற போர்வையில், அவர்கள் கட்சி வேலையைச் செய்தார்கள். கட்சியைக் கட்டியெழுப்ப முயற்சித்தார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரஜா சக்தியும் அத்தகைய நோக்கத்தைக் கொண்டது என்று தமிழ்க் காட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

அதாவது அரசாங்கம் வடக்கில் அதன் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு திட்டமிட்டு உழைக்கின்றது. இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டி வரலாம் என்று அவர்களுக்குத் தெரிகிறது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்படும் வாய்ப்புகள் குறைவு என்பதையும் அவர்கள் ஊகிக்கின்றார்கள்.

குறிப்பாக உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி இரண்டாக நிற்கின்றது. கட்சிக்குள் காணப்படும் இரண்டு அணிகளும் பகிரங்கமாக ஒருவர் மற்றவரைத் தாக்கி விமர்சித்து வருகின்றன. அரசியலமைப்பு பேரவையில் சிறீதரன் அரசாங்கத்திற்கு ஆதரவாக எட்டு தடவைகள் வாக்களித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டில் உண்மைகள் உண்டு.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஒரு படைப்பிரதானியை நியமிக்க அரசாங்க முயற்சித்த போது அவர் அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்பதும் உண்மை என்று தெரிகிறது. அது தொடர்பாக அவர் பகிரங்கமாக தன்னிலை விளக்கம் எதையும் இதுவரை தரவில்லை. தனக்கு எதிராக எழுதும் ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாகவுந் தெரியவில்லை.

ஆனால் இந்த விடயத்தை குவிமயப்படுத்தி சிறீதரனை கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் மதிப்பிறக்கம் செய்யும் வேலைகளை சுமந்திரன் அணி மிகவும் கச்சிதமாகச் செய்து வருகிறது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறி சிறீதரன் செயற்படுகிறார் என்று சொன்னால் அதற்கு எதிராக கட்சி உரிய ஒழுங்காற்று நடவடிக்கையை எடுக்கலாம். அது கட்சி விவகாரம். அதனை கட்சிக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். அது தொடர்பான விடயங்களை ஊடகவியலாளர்களைக் கூட்டிப் பகிரங்கமாகக் கதைக்க வேண்டிய தேவை என்ன? கட்சி விவகாரத்தை கட்சிக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். கட்சிக்குள்ளேயே ஒழுங்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைச் செய்யாமல் கட்சிக்கு வெளியே ஊடகங்கள் மத்தியில் அதைச்சொல்ல வேண்டிய தேவை ஏன் வந்தது?

ஏனென்றால் கட்சி ஒரு கட்டமைப்பாக பலமாக இல்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டால், வெல்லலாம் என்ற நம்பிக்கையில் தான் பலரும் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது கட்சி உயர் மட்டத்தோடும் முரண்படாமல் விசுவாசத்தை வெளிக்காட்டாமல் தந்திரமாக நடந்து கொள்கிறார்கள். வெல்லக்கூடிய குதிரை என்ற ஒரே ஒரு பலம் தான் இப்பொழுது தமிழரசுக் கட்சிக்கு உண்டு.

ஆனால் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் கூர்மையடைந்தால், அது கட்சியைப் பாதிக்கும். இப்போதுள்ள நிலைமைகளின்படி சுமந்திரன் சிறீதரனை பெருமளவுக்கு கிளிநொச்சிக்குள்ளே முடக்கி விட்டார். ஆனால் கிளிநொச்சியில் சிறீரனின் இடத்தை நிரப்ப வேறு யாரும் கட்சிக்குள் இல்லை. அது மட்டுமல்ல சிறுதரனை தோற்கடிக்கும் முயற்சியில் கட்சி மேலும் பலவீனமடையும் வாய்ப்புக்களே அதிகமாகத் தெரிகின்றன. மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் தமிழரசுக் கட்சியின் வெற்றியின் பருமனை அது நிச்சயமாகப் பாதிக்கும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி இவ்வாறு தானே தனக்குள் பிடுங்குப்படுவது, தனக்கு அதிகரித்த வெற்றி வாய்ப்புகளைத் திறந்து விட்டிருப்பதாக தேசிய மக்கள் சக்தி நம்புகின்றது.அதனால் தான் தமது கிராமமட்டக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதன் மூலமும் வடக்கை குவிமயப்படுத்தித் திட்டமிட்டு உழைப்பதன் மூலமும் வடமாகாண சபையில் பலமான வெற்றி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள். வடக்கை வெற்றி கொண்டால் கிழக்கு தானாக விழுந்து விடும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். தமிழ்த் தேசிய கோரிக்கையின் தலை வடக்கில்தான் இருக்கிறது என்றும் அவர்கள் நம்புகிறார்கள். எனவே தலையை நசுக்கி விட்டால், தமிழ்த் தேசியக் கோரிக்கை வலுவிழந்து விடும் என்றும் அவர்கள் நம்பக்கூடும். அந்த நோக்கத்தோடுதான் அவர்கள் வடக்கை குவிமயப்படுத்தி உழைக்கிறார்கள்.

இது சில தசாப்தங்களுக்கு முன்பு அதாவது 1980களின் தொடக்கத்தில் ஜெயவர்த்தன தமிழ்த் தேசியக் கோரிக்கையை தோற்கடிப்பதற்கு வகுத்த திட்டத்தின் மறுவளமான வியூகந்தான். தமிழ் மக்களின் தாயகத்தை துண்டித்து விட்டால் தமிழீழக் கோரிக்கை தோல்வி அடைந்து விடும் என்று ஜெயவர்த்தன நம்பினார். அதற்கு கிழக்கை திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் பலவீனப்படுத்துவது, வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதேசங்களைத் திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் சிங்களபௌத்த மையப்படுத்துவது. அதன் மூலம் வடக்கைத் தனிமைப் படுத்துவது. கிழக்கை இழந்தால் அதாவது தாயகம் துண்டிக்கப் பட்டால், தாயகத்தின் ஒரு பகுதி வெற்றி கொள்ளப்பட்டு விட்டால், தாயகக் கோரிக்கை தோல்வி அடைந்து விடும். அது இறுதியிலும் இறுதியாக தமிழ்த் தேசிய அரசியலையும் தோற்கடித்து விடும். முதலாம் கட்ட ஈழப்போரில் இந்த வியூகத்தை வைத்துத்தான் ஜெயவர்த்தன படை நடவடிக்கைகளையும் திட்டமிட்ட குடியேற்றங்களையும் முன்னெடுத்தார். இந்த வியூகத்தில் கிழக்கை வெற்றி கொள்வதே முதல் இலக்காக இருந்தது.

ஆனால் கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களின் பின் தேசிய மக்கள் சக்தியானது அந்த வியூகத்தை மறு வளமாகப் பயன்படுத்துகின்றது. வடக்கை வெற்றி கொண்டால் கிழக்குத் தானாக விழுந்து விடும். தமிழ்த் தேசியக் கோரிக்கை பலமிழந்து விடும் என்று தேசிய மக்கள் சக்தி திட்டமிடுகின்றதா? அந்த அடிப்படையில் தான் வடக்கை நோக்கி ஜனாதிபதி அடிக்கடி வருகிறாரா? தமிழ் மக்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளை வடக்கின் கோரிக்கைகளாகச் சுருக்கிக் கூறுவதும் அதனால் தானா? இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பின்

(22ம் பக்கம் பார்க்க)

# கல்விச் சீர்திருத்தம் படும்பாடு!

கட்டுரையாளர்:-
- அழகு குணசீலன் -

தென்கிழக்காசியாவில் குறிப்பிடத்தக்க கல்வி அபிவிருத்தி உயர் குறிகாட்டியை இலவசக் கல்வி ஊடாக சாதித்த தேசம் இலங்கை. கன்னங்கரா காலம் முதல் பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் காலத்தேவை கருதி வெவ்வேறு அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் 1980 களின் இறுதியில் 'மிஸ்டர் கிளீன் என்று வர்ணிக்கப்பட்ட அன்றைய இளம் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கல்வி சீர்திருத்த செயற்திட்டத்திற்கு பின்னர் சுமார் 45 ஆண்டுகள் கடந்து, கல்வி அமைச்சரும், பிரதமருமான ஹருணி அமரசூரியாவால் -என்.பி.பி. அரசாங்கத்தின் சார்பில் இன்றைய கல்விச் சீர்திருத்தம் முன் வைக்கப்படுகிறது.

உண்மையில் இந்தச் சீர்திருத்த சிந்தனை நல்லாட்சி, மற்றும் கோத்தபாய அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதன் தொடர்ச்சி. இது கல்விச் சீர்திருத்தம் ஒன்றின் தேவை கடந்த இரு தசாப்தங்களுக்கும் முன்னர் உணரப்பட்ட ஒன்றாக இருந்துள்ளது என்பதை கூறுகிறது. இதனால் கல்விச் சீர்திருத்தம் ஒன்று தேவையா? என்ற கேள்வியை அரசியல், சமூக, பொருளாதார தரப்புக்கள் எவையும் எழுப்பவில்லை.

அப்படியானால் இன்றைய கல்விச் சீர்திருத்த முன் மொழிவுகள் படாதபாடு படக்'காரணம் என்ன? இது 'அரசாங்கம்' என்பதற்கு அப்பால் 'அரசு' என்ற அடிப்படையில் அரசாங்க, எதிர்க்கட்சிகளும், கல்விசார் தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புக்களும், நிறுவனங்களும் ஒன்றிணைந்து தோளில் தூக்கி சுமக்க வேண்டிய பொறுப்பு. ஆனால் இடம் பெறும் நிகழ்வுகள் இதற்கு மாறான ஒரு திசையில் செல்வதை அவதானிக்க முடிகிறது.

கல்விச் சீர்திருத்தம் பற்றிய விடயதானங்களை பேசாது கல்வியமைச்சர் மீது எதிர்க்கட்சியினரும், சிங்கள -பௌத்த அடிப்படை வாதிகளும் சமூக ஊடகங்களும் அள்ளி வீசுகின்ற அநாகரிகமான தனிநபர் தாக்குதல்கள் அதுவும் ஒரு பெண்ணாக ஹருணி அமரசூரிய எதிர்கொள்ளும் அபாண்டமான பழிகள் எந்த ஒரு நாகரிக சமூகத்தாலும், அரசியலாலும் ஏற்றுக் கொள்ள முடியாதவை. ஆனால் அதற்காக அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள கல்வி சீர்திருத்தம் தவறுகள் அற்றது என்று சால்வை போடுவதற்கும் இல்லை. சீர்திருத்தங்களுக்கு கல்வி அமைச்சர் பொறுப்பு கூற வேண்டியவர் என்றாலும், முழுமையான கூட்டுப் பொறுப்பு அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அமைச்சரவைக்கும் இருக்கிறது. இந்த பொறுப்பை அரசாங்கமும், அமைச்சரவையும் கருத்தில் கொண்டார்களா? என்ற கேள்வியும் தவிர்க்க முடியாததாகிறது.

ஹருணி அமரசூரிய மீதான சேறு பூசல்களுக்கான வழியை படித்தவர்களாலும், கலாநிதிகளாலும் நிரம்பி வழியும் பாராளுமன்றமும், அமைச்சரவையும், ஜனாதிபதியும் வகுத்துக் கொடுத்துள்ளனர் என்றே கொள்ள வேண்டும். இதன் விளைவால் கல்வி அமைச்சர் தனித்து தன் மீது பூசப்படும் சேற்றை கழுவ வேண்டியுள்ளது. ஹருணிக்கு ஆதரவாக கல்விசார் நிபுணர்கள், சிவில் சமூக அமைப்புகள் வெளியிட்ட அறிக்கைகளை விடவும், காத்திரமாக இச் சீர்திருத்தத்தின் முக்கிய பங்காளிகளான அமைச்சரவையும், ஜனாதிபதியும் அவருக்கு கை கொடுக்க தவறி விட்டனர்.

அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து வந்த துறைசார் சீர்திருத்த குறைபாடுகள், விமர்சனங்களை அரசாங்கம் காது கொடுத்து கேட்காமல் மீண்டும் மீண்டும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்ற பாராளுமன்ற பெரும்பான்மை இறுமாப்பு ஹருணியை சரியான நேரத்தில் காப்பாற்றுவதற்கு பதிலாக அவர் மீதான தனிப்பட்ட தாக்குதல்களுக்கும், சேறு பூசல்களுக்கும் காரணமாகி விட்டது.

அறிவிக்கப்பட்ட சீர்திருத்தங்களில் கண்டு பிடிக்கப்பட்ட தவறுகளை அரசாங்கம் மூடி மறைக்க முயற்சி செய்ததன் மூலம், கொடுக்கப்பட்ட கால இடைவெளியில் கல்வி அமைச்சர் அநாகரிகமான தனிநபர் தாக்குதலை எதிர் கொள்ள வேண்டி இருந்தது. ஆறாம் வகுப்பு ஆங்கில மொடியூலில் உள்ள பொருத்தமற்ற இணையத்தள இணைப்பு.



பௌத்த பாடத்தில் பேசு பொருளாகி இருக்கின்ற தவறான தர்ம சக்கரம்.

கல்வி அமைச்சரை சந்தித்த தமிழ் தரப்பு வரலாற்று பாடத்தில் தமிழர் வரலாறு உள்வாங்கப்படவில்லை என்றும், அது உள்வாங்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளமை. சீர்திருத்தத்தில் வரலாறு விருப்பத்தேர்வு பாடமாக பட்டியல் இடப்பட்டுள்ளமை.

துறைசார் தொழிற்சங்கங்கள், நிறுவனங்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர் அமைப்புக்களோடு இது தொடர்பான கலந்துரையாடலை அரசாங்கம் தவிர்த்தது.

வெளிப்படைத்தன்மை இன்றியும், அவசர அவசரமாகவும், சிவில் சமூக அமைப்புக்களை புறக்கணித்து இது விடயத்தில் அரசாங்கம் செயற்பட்ட விதம் ஜனநாயகத்திற்கும், சமூக அமைப்புக்களின் கருத்துச் சுதந்திரத்திற்கும் முரணான ஒரு செயலாக கொள்ளப்படுகிறது.

கல்விசார் கட்டமைப்புக்களை விடவும், பாராளுமன்ற எதிர்கட்சி ஜனநாயகத்தை விடவும், கொழும்பு மைய அரசியலை கடந்த 76 ஆண்டுகள் போன்றே இந்த இடதுசாரி (?) அல்லது சிலர் கூறுவது போன்று இடதுசாரிகளை கொண்ட (?) ஆட்சியிலும் பௌத்த பீடமே தீர்மானங்களை எடுப்பதிலும், அரசாங்கத்திற்கு வழி காட்டுவதிலும் வாக்களித்த மக்களை விடவும் சக்திவாய்ந்ததாக உள்ளது என்பது இந்த விடயத்திலும் நிருபிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் ஹருணி அமரசூரிய சில தெரிவு செய்யப்பட்ட பௌத்த பீட தலைமைகளை சந்தித்தார். சந்திப்பிற்கு பின்னர் அவர் பொது வெளியில் என்ன கூறியிருந்தாலும், பௌத்த தலைவர்கள் தவறுகள் குறித்து திருப்தியடையவில்லை. அவை திருத்தப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இலங்கையின் பாரம்பரிய விழுமியங்கள், மதகலாச்சார, பண்பாட்டு நெறிமுறைகள் பற்றியும், இது விடயத்தில் மேற்குலக கல்வி முறையின் பொருத்தப்பாடு பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டதாக எதிர்க்கட்சிகளுக்கு கசிந்துள்ளது. சீர்திருத்தம் பின் போடப்படும் என்பதால் எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அவசரம் காட்டவில்லை.

சீர்திருத்தம் பின்போடப்படப் போகிறது என்ற இந்தச் செய்தி பௌத்த பீடங்களோடு நெருக்கமான உறவைப் பேணும் பௌத்த சிங்கள தேசியவாதி விமல் வீரவன்சவுக்கும் எட்ட அவர் சத்தியாக்கிரக போராட்டத்தை அறிவித்தார். சில மணித்தியாலங்களுக்கு முன்னர் கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவோம் என்று சூளுரைத்த அநுரவும் அவரது அரசாங்கமும் அமைச்சரவைக் கூட்டத்தில் சர்ச்சைக்குரிய மொடியூலை நடைமுறைப்படுத்துவதை 2027 க்கு பின்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதை அரசாங்கம் எப்பவோ செய்திருந்தால் ஹருணி காப்பாற்றப்பட்டிருப்பார் கழுவப்பட்டிருப்பார். அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாகவும் இருந்திருக்கும். முன் வைத்த காலை பின் வைக்க மாட்டோம் என்பது ஜதார்த்த, ஜனநாயக அரசியல் அல்ல. இதனால் தான் சில சமூக அமைப்புகள் கொத்தபாயாவின் 'சேதன பசளை திட்டத்துடன்' இதனை ஒப்பிடுகின்றன. அதுவும் மக்களின் விவசாயம் சார் பங்காளிகளின் கோரிக்கைகளை புறம்தள்ளி, மேற்குலக சுற்றாடல் பாதுகாப்பு ஆர்வத்தை பூர்த்தி செய்ய, உள்ளூர் களநிலையை கவனத்தில் எடுக்காது அலுவலகத்தில் இருந்து அதிகாரிகள் போட்ட திட்டவரைபு. இதை அன்று எதிர்கட்சியில் இருந்த ஜே.வி.பி. எப்படி விமர்சித்தது என்பதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அரசாங்கத்தின் நல்ல ஒரு நோக்கம், அது செயற்படுத்தப்படும் விதத்தில் தவறிழைத்து விட்டது. இந்த நாட்டின் முக்கியமான 76 ஆண்டுகால சிறுபான்மை தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண ஏன்? அவசரப்படுகிறீர்கள்? எங்களுக்கு ஐந்தாண்டுகள் உள்ளன என்று கூறுகின்ற அரசாங்கம், இவ்வாறான அவசரக் குடுக்கை தவறுகள் மூலம் இறுதியில் அரசியல் தீர்வையும் பௌத்தபீடங்களின் தலையில் கட்டி விடப் போகிறது. கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இந்த நாட்டில் இனி இனவாதத்திற்கு இடமில்லை என்று கூறுகிறார்கள். இந்த வார்த்தைகளில் உள்ள உண்மைத்தன்மை என்ன? கல்விச் சீர்திருத்த விடயத்தில் கல்வியை விடவும் கட்சி அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது போல் இனப்பிரச்சினைக்கான தீர்விலும் இது இடம் பெறாது என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க காலத்தில் கல்விச் சீர்திருத்தம் குறித்து வெள்ளை அறிக்கை சமர்பிக்கப்பட்டு முழுமையாக சம்பந்தப்பட்ட போது சகல தரப்பாலும் விமர்சனங்கள், ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் நீக்கப்பட திருத்தப்பட சேர்கப்பட வேண்டிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. அதற்கான கால அவகாசமும் இருந்தது. இதனால் தான் வெள்ளை அறிக்கை அற்ற இந்த அவசர நடவடிக்கையை சீர்திருத்தங்கள் ஓட்டப்பந்தயம் அல்ல மரதன் ஓட்டம் என்று ஊடகங்கள் விமர்சிக்கின்றன.

மேற்கு நாடுகளில் பதினாறு வயதுக் குட்பட்ட மாணவர்களின் சமூக ஊடகப்பயன்பாட்டை தடைசெய்யும் சட்டங்களை நிறைவேற்றி அவர்களை பாதுகாக்கின்றன. அவுஸ்திரேலியாவில் இச் சட்டம் நடைமுறைக்கு வந்து முதல் நாளில் 5,50,000 கணக்குகள் மெட்டாவால் தடுக்கப்பட்டன. முதல் வாரத்தில் இன்டர்கிராம் கணக்குகள் 3,30,639, பேஸ் புக் 1,73,497 கணக்குகள் தடுக்கப்பட்டன. அடுத்த டென்மார்க் இது விடயத்தில் முன் மாதிரியாக செயற்படவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் விடயம் விவாதிக்கப்படுகிறது. அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் தடை இருக்கிறது. இப்படி இருக்கையில் நாம் எங்கு போய்க்கொண்டிருக்கின்றோம்?

நியாயமான மற்றும் சமநிலையான வரலாற்று பாடத்திட்டம் என்பது மேலதிக விருப்பத்தேர்வு அல்ல. இலங்கை ஏன் இப்படி இருக்கிறது?

என்பதற்கான விமர்சன சிந்தனையை வளர்க்கூடியது. இதனால் வரலாற்றை ஒரு விருப்பப்பாடமாக முக்கியத்துவம் குறைப்பது சமூகத்தை அதன் வேர்களில் இருந்து துண்டிக்க வழிவகுக்கும் என்ற சமூக வரலாற்று கல்வியாளர்களின் வாதம் ஏற்புடையதே.

இதற்கிடையில் ஜனாதிபதி அவசர அவசரமாக கல்விசார் அமைப்புக்களின் சில பிரதிநிதிகளை சந்தித்து பேசியுள்ளார். ஏற்கெனவே குறிப்பிட்ட சீர்திருத்தம் குறித்து கலந்துரையாடல் வேண்டும் என்று கோருகின்ற அமைப்புக்களை தவிர்த்த ஜனாதிபதியின் செயற்பாடு ஒரு பிரித்தாளும் தந்திரோபாய அணுகல் என்று மறுதரப்பால் விமர்சிக்கப்படுகிறது. ஜனாதிபதியை சந்தித்த குழுவில் இருந்தவர்களுள் ஒருவர் அகில இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜலவல பன்சேகர தேரர். சர்ச்சைக்குரிய கல்விச்சீர்திருத்தத்தை ஜனாதிபதிக்கு முன்னால் கடுமையாக விமர்சனம் செய்த அவர் இந்த தவறுகளை செய்தவர்களை கர்மா சும்மா விடாது என்றும், கொழும்பு பேரா வாவியில் தவளைகளாகவும், கண்டி வாவியில் ஆமைகளாகவும் பிறப்பார்கள் என்றும் சாபமிட்டுள்ளார். கல்விச் சீர்திருத்த தவறுகளை விமர்சனம் செய்கின்றவர்கள் எல்லோரும், எவரும் கல்விச் சீர்திருத்தம் தேவையற்றது என்று கூறவில்லை. அதன் உள்ளடக்கம் பற்றியே பேசுகிறார்கள். இந்த விமர்சனங்களை புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய பொறுப்பை அரசாங்கமும் எதிர்க்கட்சி கட்சிகளும், கல்விசார் அமைப்புகளும், நிறுவனங்களும் கவனத்தில் கொள்ளவதிலேயே. சீர்திருத்தின் அடைவு தங்கியிருக்கிறது.

ஆபிரிக்க ஆகிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்ட சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கடந்த 12ஆம் திகதி அதிகாலை தென் ஆபிரிக்காவின் டர்பன் நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்திருந்தார்.

அவர் இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருப்பார் என முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்த போது கிட்டத்தட்ட அரை நாள் பயணத்துடன் பெய்ஜிங்கிற்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார். அவரது இந்த பயணத்திற்கு சீனா அதிகம் முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை என்பது கவனிக்க வேண்டிய விடயம்.

முன்கூட்டியே இந்த பயணத் திட்டம் தொடர்பாக சீனா அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கவில்லை. இலங்கை அரசாங்கமும் கடைசி நேரத்திலேயே அதனை உறுதிப்படுத்தியது.

எனினும் மறுநாள் காலையில் சீன வெளியுறவு அமைச்சர் தங்கியிருந்த விடுதிக்கு சென்று, அவரைச் சந்தித்துப் பேசியிருந்தார் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்.

அந்தச் சந்திப்பின் போது முக்கியமான பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதும், அது தொடர்பாக அரசாங்கம் விரிவான தகவல்கள் எதையும் வெளியிடவில்லை.



வர்த்தகம், முதலீடு, அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. பேரிடருக்குப் பின்னர் நாட்டை மீளக் கட்டியெழுப்புவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இருந்து இதுவரையில் நான்கு உயர் மட்ட குழுக்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தன.

ஆனால் இதுவரையில் சீனாவின் தரப்பில் இருந்து பெரியளவிலான நிவாரண உதவிகள் இலங்கைக்கு வழங்கப்படவோ, உறுதியளிக்கப்படவோ இல்லை. இது இலங்கை அரசாங்கத்துக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கின்ற விடயம்.

அதனால் சீன வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் போது, பெரியளவிலான உதவிப் பொதி ஒன்றை அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்புகள் காணப்பட்டன. ஆனால் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, வெறும் கையை வீசிக் கொண்டு வந்து விட்டுப் போயிருக்கிறார்.


காட்டுச் சட்டம் மீண்டும் எழுச்சி பெறுவதையும், அனைத்து வகையான அதிகார அரசியல் மற்றும் கொடுமைப்படுத்துதலையும் எதிர்க்கும் என்றும்,

பல தரப்பு மற்றும் சர்வதேச நியாயம் மற்றும் நீதியைப் பாதுகாக்கும் என்றும் சீன வெளியுறவு அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இது அமெரிக்காவின் அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்கு, சீன உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

காட்டுச் சட்டம் என்று அவர் குறிப்பிட்டது, வெனிசுலா விவகாரத்தில் அமெரிக்காவில் நடத்தையை தான். இது பற்றி வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



அது அமெரிக்காவுக்கு கோபத்தை ஏற்படுத்தும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதல்கள், வெனிசுலா மீதான ஆக்கிரமிப்பு செயற்பாடு என்பனவற்றில் சீனாவின் எதிர்வினைகள் போதாமல் இருந்தன.

அது சீனாவை நம்பியிருப்பது பற்றிய அச்சத்தை பல நாடுகளுக்கு உருவாயிருக்கக் கூடும் என்று பீஜிங் நம்புவதாகத் தெரிகிறது. அதனால் தான் இவ்வாறானதொரு கருத்தை இலங்கையிடம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதை விட இலங்கையின் அண்மைக் கால நடத்தைகள் தொடர்பான மாறுபட்ட கருத்தும் வாங் யியிடம் இருந்திருக்கலாம்.

# வெறுங் கையுடன் வந்த வாங் ஜி

தென் ஆபிரிக்காவில் இருந்து கிழக்காசியா நோக்கி பயணம் மேற்கொள்ளும், உலகத் தலைவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறுகிய ஓய்வெடுப்பது வழமை. எரிபொருள் நிரப்புதல், விமானிகள் ஓய்வு, பராமரிப்பு போன்ற காரணங்களுக்காக இந்த தரிப்பு இடம்பெறுகிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது, தென் ஆபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோச, பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன் போன்றவர்கள் இவ்வாறான பயணத்தின் போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறுகிய நேரம் தரித்திருந்தனர். அந்த சந்தர்ப்பங்களில் ரணில் விக்கிரமசிங்க அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

பொதுவாக, நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்கள் வரும் போது தான் விமான நிலையம் செல்வது வழக்கம். பெரும்பாலும் அவர்கள் செல்வதில்லை.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க தென் ஆபிரிக்க மற்றும் பிரெஞ்சு ஜனாதிபதிகளுடன் சந்திப்பை மேற்கொள்வதற்காக மரியாதை நிமித்தம் விமான நிலையத்துக்கு சென்று சந்தித்திருந்தார். ஆனால், கடந்த வாரம் கொழும்பு வந்த சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, முக்கியத்துவம் வாய்ந்த ஒருவராக இருந்த போதும், அவரை ஜனாதிபதியோ பிரதமரோ சந்திக்கவில்லை. அவரும் அவர்களை சந்திக்க முற்படவில்லை.

நள்ளிரவில் விமான நிலையத்தில் சீன வெளியுறவு அமைச்சரை வரவேற்பதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் சீன தூதுவர் கீ சென்ஹொங் ஆகியோரே சென்றிருந்தனர்.

பாதிக்கப்பட்ட வீதிகள் ரயில்பாதை பாதை மற்றும் பாலங்களை புனரமைத்தல் உள்ளிட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு சீன அரசாங்கத்தின் உதவியை கோரினேன்.

இந்தக் கோரிக்கையில் தனது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதாக சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி உறுயளித்தார் என்று விஜித்த ஹேரத் சுருக்கமாக கூறியிருந்தார்.

சீன வெளியுறவு அமைச்சர், இந்த பயணத்தின் போது இலங்கைக்கு பேரிடர் நிவாரண நிதியொன்றை அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பு அரசாங்கத்திடம் காணப்பட்டது.

அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது, பேரிடர் நிவாரண பணிகளை முன்னெடுப்பதற்காக, 450 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அறிவித்திருந்தார். இது இலங்கைக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய பேரிடர் நிவாரண தொகையாகும்.

இதையடுத்து, சீனாவிடம் இருந்து கிடைக்கக் கூடிய உதவி தொடர்பாக, பெரியளவிலான எதிர்பார்ப்பு காணப்பட்டது.

உலகின் முன்னணி பொருளாதாரத்தை கொண்ட நாடுகளின் அமெரிக்காவுக்கு அடுத்ததாக இரண்டாமிடத்தில் இருக்கின்ற சீனா, ஐந்தாமிடத்தில் உள்ள இந்தியாவை விட அதிகம் நிதியுதவியை வழங்கும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் காணப்பட்டது.

ஆனால் சீனாவிடம் அத்தகைய மனோநிலை இருக்கிறதா என்ற சந்தேகங்கள் இப்போது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பேரிடர் ஏற்பட்ட பின்னர், சீனாவில்

அவர் கையில் எந்தவொரு உதவிப் பொதியையும் எடுத்து வரவும் இல்லை அது பற்றி இலங்கை அரசாங்கத்துடன் பெரியளவில் பேச்சுக்களை நடத்தவும் இல்லை. அப்படியானால், சீனாவுக்கு இலங்கை முக்கியமானதில்லையா? அந்த முக்கியத்துவத்தை இழந்து விட்டது என கொள்ள முடியுமா? நிச்சயமாக இல்லை.

இலங்கை எப்பொழுதும் சீனாவுக்கும் சரி வேறு எந்த வல்லாதிக்க சக்திகளுக்கும் சரி முக்கியமானதே. அந்த முக்கியத்துவத்தை அது ஒருபோதும் இழந்து விடாது.

ஏனென்றால் அதன் அமைவிடம் அத்தகையது. அதன் முக்கியத்துவம் கேந்திர அமைவிடத்தில் தான் தங்கியுள்ளது. இலங்கையுடன் சீனா உறவுகளை வலுப்படுத்த விரும்புகிறது.

சிறிலங்காவுடன் மூலோபாய கூட்டுறவு பங்காண்மையை ஆழப்படுத்த சீனா விரும்புவதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம், வாங் யி, தெரிவித்துள்ளதாக சீன செய்தி நிறுவனமான சின்ஹுஜீவா செய்தி வெளியிட்டது.

அமைச்சர் விஜித ஹேரத், இலங்கையும் அத்தகைய மூலோபாய கூட்டுக்கு விருப்பம் கொண்டிருப்பதாக கூறியிருக்கிறார். அதைவிட அதிகரித்து வரும் சிக்கலான மற்றும் நிலையற்ற சர்வதேச சூழ்நிலையை எதிர் கொண்டு, சிறிய மற்றும் நடுத்தர நாடுகளின் சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களை சீனா உறுதியாகப் பாதுகாக்கும் என்றும்,

ஐ.நா. சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளை நிலைநிறுத்தும் என்றும்,

இந்த சந்திப்புகளின் போது, இன்னும் இரண்டு முக்கிய விடயங்கள் பேசப்பட்டிருக்கின்றன. ஒன்று – ஒரே சீனா என்ற கொள்கை. இலங்கை இந்த நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சருக்கு மீண்டும் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அண்மைக் காலங்களில் சீனப் பிரமுகர்கள் இலங்கைக்கு வருகின்ற போதும் இலங்கை தலைவர்களை சந்திக்கின்ற போதும், இத்தகைய உறுதிமொழிகளை பெற்றுக் கொள்கிறார்கள்.

இது ஒரு வகை தந்திரமாகவோ, கொழும்பின் பிந்திய நிலைப்பாட்டை நாடி பிடித்துப் பார்க்கும் செயற்பாடாகவோ தான் தெரிகிறது.

இரண்டாவது இதற்கு முன்னர் கொழும்பு வந்திருந்த சீன பிரதிநிதிகளின் குழுக்கள் ஆய்வுக் கப்பல்களுக்கான தடையை நீக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தன.

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் அந்த தடையை நீக்காமலும் புதுப்பிக்காமலும், ஓராண்டு காலத்தை கடத்திவிட்டது. இது தொடர்பான செயற்பாட்டு நடைமுறைகளை உருவாக்கும் பணி நடந்து வருவதாக நீண்ட நாட்களாக கூறி வருகிறது.

இந்த தடை அகற்றப்படுவதை சீனா விரும்புகின்ற நிலையில், இதுபற்றி வாங் யி– விஜித ஹேரத் சந்திப்பின் போது, முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன. ஆனால் அதுபற்றி அதிகாரபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியாகவில்லை.

ஆனாலும் சீனாவின் பேரிடர் நிவாரணப் பொதி பற்றிய அறிவிப்பு வெளியாவதற்கும், இந்த தடை நீக்க விவகாரத்திற்கும் (22ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் அநுரகுமார:- வழங்கல் இன்றி உருவான பிரபலமா? அல்லது ஒரு அரசியல் மாயையா?

கட்டுரையாளர்:-
- ராஜ்.சிவநாதன் -



யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கொண்ட சமீபத்திய விஜயம் வட மாகாணத்தில் வழக்கத்திலிருந்து மாறுபட்ட அரசியல் சூழலை உருவாக்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட வரவேற்புகளை விட இந்த விஜயம் பொதுமக்களின் வெளிப்படையான அன்பையும் ஊடகங்களின் தீவிர கவனத்தையும் பெற்றது. குறிப்பாக இளைஞர்கள் குறிப்பாக இளம் பெண்கள் மத்தியில் காணப்பட்ட ஆர்வம் கவனிக்கத்தக்கதாக இருந்தது.

இதன் மூலம் ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது கொள்கை செயல்பாடுகள் இன்னும் முழுமையாக அமல்படுத்தப்படாத நிலையில் அனுர ஏன் வட பகுதியில் பிரபலமாகிறார் மற்றும் இது அந்தப் பகுதியின் எதிர்காலத்திற்கு என்ன அர்த்தம் கொண்டது என்பதே அந்தக் கேள்வி.

### ஜனாதிபதி வரலாற்றில் இருந்து விலகல்

பல தசாப்தங்களாக யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதிகள் வருகை தந்தபோது கட்டுப்பாடு சந்தேகம் அல்லது அமைதியான அலட்சியம் தான் காணப்பட்டது. மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் முன் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளுடனும் அரசியல் மொழிகளுடனும் வந்தனர். வட பகுதி மக்களுக்கு இவ்விழாக்கள் பங்காளித்தன்மையை விட அதிகாரத்தின் வெளிப்பாடாகவே தோன்றின.

ஆனால் அனுரவின் விஜயம் கொள்கை அறிவிப்புகளால் அல்ல அவரது அணுகுமுறையால் வேறுபட்டதாக உணரப்பட்டது. அவரது எளிமையான உரை நடை, இயல்பான மக்கள் தொடர்பு மற்றும் வெற்றிக் காட்சிகள் இல்லாத வெளிப்பாடு வட பகுதி அரசியல் அனுபவத்தில் நீண்ட காலமாக காணப்படாத இயல்புத் தன்மையை வெளிப்படுத்தியது. இதுவே கடந்த காலத்திலிருந்து ஒரு தெளிவான மாற்றமாக அமைந்தது.

### இளைஞர்களுடன் ஏற்பட்ட தொடர்பும் தன்மையின் தாக்கமும்!

அனுரவின் யாழ்ப்பாண விஜயத்தின் மிக முக்கியமான அம்சமாக இளைஞர்களிடையே ஏற்பட்ட ஈர்ப்பு காணப்படுகிறது. தமிழ் அரசியல் கட்சிகள் மீது விரக்தியும் அரசமைப்பின் மீது ஆழ்ந்த சந்தேகமும் கொண்டுள்ள இளைஞர்களுக்கு அனுர ஒரு வித்தியாசமான இடத்தை பிடித்துள்ளார். அவர் தேசிய அளவிலான தலைவராக இருந்தாலும் அணுகக்கூடிய மனிதராக தோன்றுகிறார்.

குறிப்பாக இளம் பெண்கள் மத்தியில் அவரது அமைதியான நம்பிக்கை எளிமையான தோற்றம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட உரை நடை கொள்கைகளை விட தன்மையின் மூலம் மக்களை ஈர்க்கும் தென்னிந்திய அரசியல் தலைவர்களை நினைவு ஊட்டுகிறது. சமூக ஊடகங்கள் இந்த ஈர்ப்பை மேலும் பெருக்கி அரசியல் ஈடுபாட்டை தனிப்பட்ட உணர்ச்சிப் பூர்வ அனுபவமாக மாற்றியுள்ளது.

இது வழக்கமான கருத்தியல் ஆதரவு அல்ல. செயல்பாட்டிற்கு முன்பே உருவாகும் உணர்ச்சி சார் அரசியலின் வெளிப்பாடாகும்.

அனுரவின் அரசியல் முக்கியத்துவம் இங்கேதான் தெளிவாகிறது. முக்கியமான தேர்தல் வாக்குறுதிகள் இன்னும் முழுமையாக நிறைவேறாத நிலையில் கூட அவரது பிரபலத்தன்மை உயர்ந்து வருகிறது. கட்டமைப்பு பொருளாதார சீர்திருத்தங்கள் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நடவடிக்கைகள் ஊழல் ஒழிப்பு அமைப்புகள் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள் இன்னும் மெதுவாகவே முன்னேறுகின்றன அல்லது நிறைவடையவில்லை.

இத்தகைய சூழலிலும் மக்கள் காட்டும் பொறுமை அபூர்வமானதாக உள்ளது. இது இலங்கை அரசியல் மனநிலையில் ஏற்பட்டுள்ள ஆழமான மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. பல தசாப்தங்களான அரசியல் துரோகங்களுக்குப் பிறகு குறிப்பாக இளைஞர்கள் உடனடி பலன்களை விட நேர்மை நோக்கம் மற்றும் திசையை அதிகமாக மதிக்கத் தொடங்கியுள்ளனர். ஊழலும் இன அரசியலும் நிரம்பிய சூழலில் நேர்மையே ஒரு அரசியல் மூலதனமாக மாறியுள்ளது. ஆனால் செயல்பாடுகளில்லாத நேர்மை நீடிக்க முடியாத அடிப்படையாகும்.

### வடக்கு பகுதிக்கு இதன் பொருள் என்ன?

வட மாகாணத்திற்கு இந்த தருணம் வாய்ப்பையும் ஆபத்தையும் ஒரே நேரத்தில் கொண்டுள்ளது. ஒரு பக்கம் அனுரவின் ஏற்றுக்கொள்ளல் வடக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான உறவை இன அடிப்படையிலான பேரம் பேசுதலிலிருந்து கொள்கை அடிப்படையிலான தேசிய இணைப்பாக மாற்றக்கூடிய வாய்ப்பை வழங்குகிறது. இது வட பகுதியின் பொருளாதார மற்றும் சமூக தேவைகளை சிறுபான்மை கோரிக்கைகளாக தனிமைப்படுத்தாமல் பரந்த சீர்திருத்தச் சூழலுக்குள் இணைக்கும் வாய்ப்பையும் தருகிறது. ஆனால் வரலாறு எச்சரிக்கையை முன்வைக்கிறது.

வட பகுதி இதற்கு முன்பும் பல தலைவர்களை அன்புடன் வரவேற்று மாற்றமின்றி வழியனுப்பியுள்ளது. கவர்ச்சி நிலப் பிரச்சினைகளை தீர்க்காது. பிரபலத்தன்மை வேலை வாய்ப்புகளை உருவாக்காது. குறியீட்டு விஜயங்கள் அதிகாரப் பகிர்வு பொறுப்புணர்வு அல்லது நீடித்த தனியார் முதலீடுகளுக்கு மாற்றாக அமையாது.

அனுரகுமார திசாநாயக்கின் யாழ்ப்பாண விஜயம் ஒரு அபூர்வமான அரசியல் தருணமாகும். இளைஞர்கள் குறிப்பாக இளம் பெண்கள் மத்தியில் உருவான அவரது ஈர்ப்பு செயற்கையான அரசியலால் சோர்ந்த நாட்டில் உண்மைத் தன்மைக்கான ஆழ்ந்த தேவை இருப்பதை வெளிப்படுத்துகிறது.

இந்தத் தருணம் ஒரு திருப்புமுனையாக மாறுமா அல்லது இன்னொரு மாயையாக முடிவடையுமா என்பது அதன் பிந்தைய செயல்பாடுகளிலேயே நிர்ணயிக்கப்படும். வட பகுதி மக்களிடையே நம்பிக்கை மெதுவாக மீண்டும் உருவாகிறது ஆனால் உண்மையான நம்பிக்கை செயல்பாடுகளின் மூலம் மட்டுமே உறுதியாகும்.

## நிலவில் அமையவுள்ள ஹோட்டல்

2032ஆம் ஆண்டிற்குள் நிலவில் ஹொட்டல் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா நிறுவனம் இறங்கியுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியில் கவனம் செலுத்தி வரும் உலக நாடுகள் மீண்டும் நிலவிற்கு மனிதனை அனுப்ப திட்டமிட்டு வருகின்றன. அமெரிக்காவின் நாசா, 1969 முதல் 1972 வரை நிலவுக்கு 6 முறை மனிதர்களை அனுப்பிய நிலையில், அதன் பின்னர் தற்போது வரை மனிதர்கள் சென்றதில்லை. 2028 ஆம் ஆண்டில் அமெரிக்காவும், 2030 ஆம் ஆண்டில் சீனாவும், 2040 ஆம் ஆண்டில் இந்தியாவும் நிலவிற்கு மனிதர்களை அனுப்புவதை இலக்காக வைத்து செயலாற்றி வருகிறது.

இந்த நிலையில், நிலவில் ஹொட்டல் அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா நிறுவனம் ஒன்று இறங்கியுள்ளது. கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட பசர ளியஉந என்ற ஸ்டார்ட்அப் நிறுவனம், 2032 ஆம் ஆண்டிற்குள் நிலவில் ஹொட்டல் ஒன்றை திறக்க திட்டமிட்டுள்ளது.

கலிபோர்னியா பெர்க்லி பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் மற்றும் கணினி அறிவியலில் பட்டதாரியான 21 வயதான ஸ்கைலர் சான் என்ற இளைஞர் இந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

SpaceX Nvidia உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் இந்த திட்டத்தில் முதலீடு செய்துள்ளதாக கூறப்படுகிறது. 2029 ஆம் ஆண்டில் நிலவில் கட்டுமானத்தை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ள நிறுவனம், 2032 ஆம் ஆண்டில் கட்டுமானத்தை முடித்து, தொடக்கத்தில் 4 பேர் முதல் 10 பேர் வரை தங்கும் வகையில் ஹொட்டல் இருக்கும் என தெரிவித்துள்ளது. நிலவில் உள்ள மணல் போன்ற கட்டுமான பொருட்களை வைத்தே இந்த ஹோட்டலை கட்டத் திட்டமிட்டுள்ளனர்.

கட்டணம் இறுதி விலை நிர்ணயம் செய்யப்படவில்லை என்றாலும் தங்குவதற்கு 10 மில்லியன் டொலருக்கும (இந்திய மதிப்பில் ரூ.90 கோடி) அதிகமாக செலவாகும் என்றும், 1,000 டொலர் திரும்பப் பெற முடியாத விண்ணப்பக் கட்டணம் தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ளது. மேலும், வைப்புத்தொகையாக 250,000 முதல் 1 மில்லியன் டொலர் வரை செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்து, 2027 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட தகுதியான நபர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும், 2031 ஆம் ஆண்டில் விண்வெளி செல்வதற்காக பயிற்சி வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. பெரும் தொழிலதிபர்கள் மற்றும் வித்தியாசமான முறையில் தேனிலவு கொண்டாட விரும்பும் புதுமணத் தம்பதிகள் இதன் ஆரம்பகட்ட வாடிக்கையாளர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே அமேசான் நிறுவனர் ஜெஃப் பெஸாஸ்க்கு சொந்தமான ப்ளூா ஆர்ஜின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மனிதர்களை விண்வெளி சுற்றுலா அழைத்துச் சென்று வருகிறது. இதில் ஒரு நபருக்கு தோராயமாக 2,00,000 டொலர் கட்டணம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இதுவரை 15 ஆம் அதிகமான பயணம் மூலம் 50க்கும் மேற்பட்ட நபர்களை, பூமியில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் உயரத்தை தாண்டி, கார்மன் கோடு என்று அழைக்கப்படும் விண்வெளியின் எல்லைக்கு சற்று மேலே அழைத்து சென்று விண்வெளியின் எடையற்ற தன்மையை அனுபவிக்க வைத்து அழைத்து வந்துள்ளது ப்ளூா ஆர்ஜின்.

# கேள்விக்குள்ளாகி இருக்கும் உலக நாடுகளின் பாதுகாப்பும் -இறைமையும்

கட்டுரையாளர்:- இலங்கையில் இருந்து - வீதனபாலசிங்கம் -



தனது முதலாவது பதவிக் காலத்தில் (2016 – 2020) வெளிநாடுகளில் சண்டையிடுவதற்காக ஒரு அமெரிக்கப் படை வீரனைக் கூட அனுப்பவில்லை என்று டொனால்ட் ட்ரம்ப் பெருமைப்பட்டதை எத்தனை பேர் நினைவில் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. இரண்டாவது தடவையாக வெள்ளை மாளிகைக்குள் 2025 ஜனவரியில் பிரவேசித்த பிறகு பத்து மாத காலத்திற்குள் உலகில் எட்டுப் போர்களை தடுத்து நிறுத்தியதற்காக தனக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று அவர் தானாகவே கேட்டார். அந்தப் பரிசு தனக்கு கிடைக்காது என்பதும் அவருக்கு தெரிந்திருந்தது.

இரண்டாவது பதவிக் காலத்தின் தொடக்கத்தில் இருந்தே அவர் நாடுகளை ஆக்கிரமிப்பது குறித்து பேசி வந்திருக்கிறார். எந்தவிதமான பிரச்சினையையும் தோற்றுவிக்காத அயல் நாடான கனடாவை அமெரிக்காவின் 51வது மாநிலமாக்குவது குறித்தும் டென்மார்க்கிற்கு சொந்தமான கிறீன்லாந்து தீவையும் பனாமா கால்வாயையும் கைப்பற்றுவது குறித்தும் அவர் பேசினார். இஸ்ரேல் பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்வதை ஆதரித்த ட்ரம்ப் காசாவில் இருந்து மக்களை வெளியேற்றி விட்டு அந்தப் பள்ளத் தாக்கை உல்லாசக் கடற்கரையாக மாற்றுவதற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரை நிறுத்தியதில் ட்ரம்புக்கு எந்த தொடர்பும் கிடையாது என்று புதுடில்லி திட்டவட்டமாக மறுத்த போதிலும், இதுவரையில் அவர் எழுபதுக்கும் அதிகமான தடவைகள் தெற்காசியாவின் இரு அணுவாயுத நாடுகளும் போரை கைவிட்டதற்கு தானே காரணம் என்று கூறியதாக சர்வதேச ஊடகங்கள் அறிவித்தன. தன்னை ஒரு சமாதான விரும்பி என்று காண்பித்த அதே வேளை, ட்ரம்ப் நைஜீரியா, சோமாலியா, ஈராக், சிரியா, யேமன் மற்றும் ஈரான் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்.

தற்போது புத்தாண்டு பிறந்து மூன்று நாட்களில் தென்னமெரிக்க நாடான வெனிசுலாவில் இரவோடிரவாக குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய ட்ரம்ப், ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவையும் அவரது மனைவி சிலியா புளோரஸையும் அமெரிக்காவுக்கு கடத்திச் சென்று தடுத்து வைத்திருக்கிறார். போதைப் பொருள் பயங்கரவாத இயக்கம் ஒன்றுக்கு தலைமை தாங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு மதுரோ நியூயோர்க் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

வெனிசுலாவில் தலையீடு செய்வதற்கு தன்னை அமெரிக்காவின் அரசியலமைப்பு அனுமதிப்பதாக கூறியிருக்கும் ட்ரம்ப், அமெரிக்க படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் அமெரிக்கர்களை பாதுகாப்பது தனது கடமை என்று வாதிடுகிறார்.

ஆனால், அமெரிக்காவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை வெனிசுலா தோற்றுவித்தது என்று புத்தி சுவாதீனமான எவரும் கூற மாட்டார்கள். அத்துடன் மதுரோ போதைப்பொருள் கடத்தல் குழுமம் ஒன்றை நடத்தி வந்தார் என்பதற்கு ட்ரம்ப் நிருவாகம் நம்பகத் தன்மையான சான்று எதையும் உலகின் முன் வைக்கவுமில்லை.

வெனிசுலா மீது ட்ரம்ப் தனது முதலாவது பதவிக் காலத்திலேயே கண் வைத்தார். ஜனாதிபதி மதுரோவுக்கும் அவரது உயர்மட்ட உதவியாளர்களுக்கும் எதிராக முதலில் 2019 ஆம் ஆண்டில் போதைப் பொருள் கடத்தல் குற்றச் சாட்டுக்களை சுமத்தி அமெரிக்காவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எதிர்க்கட்சி அரசியல்வாதியான பாராளுமன்ற சபாநாயகர் ஜுவான் குவாய்டோவையே வெனிசுலாவின் பதில் ஜனாதிபதியாக அமெரிக்காவும் அதன் மேற்குலக நேசநாடுகளும் அங்கீகரித்தன.



ட்ரம்ப் கடந்த வருடம் ஜனவரியில் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது வெளியுறவுக் கொள்கையில் வெனிசுலாவுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. மதுரோவை உலகில் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் மன்னர்களில் ஒருவர் என்று குற்றஞ்சாட்டிய அமெரிக்கா 'போதைப் பொருளுக்கு எதிரான போர்' ஒன்றைப் பிரகடனம் செய்தது. மதுரோவை கைது செய்வதற்கு உதவக்கூடிய தகவல்களை தருவோருக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சன்மானம் வழங்கப்படும் என்றும் ட்ரம்ப் நிருவாகம் அறிவித்தது.

கரிபியன் பிராந்தியத்துக்கு ஆயிரக்கணக்கான துருப்புக்களையும் போர்க் கப்பல்களையும் அனுப்பிய ட்ரம்ப் நிருவாகம் போதைப் பொருளைக் கடத்திச் செல்லும் படகுகள் மீது விமானத் தாக்குதல் நடத்தியதாக கூறிய போதிலும் உண்மையில் நூற்றுக்கணக்கான குடிமக்களே கொல்லப்பட்டார்கள்.

வெனிசுலாவுக்குள் இரகசிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ.க்கு அதிகாரமளித்த ட்ரம்ப் அந்த நாட்டில் இருந்து எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்துக்கு தடை விதித்தார். தடை செய்யப்பட்ட எண்ணெயை ஏற்றிச் சென்றதாக கடந்த வெள்ளிக்கிழமை வரை ஐந்து கப்பல்களை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

தனக்கு வரப் போகின்ற ஆபத்தை உணர்ந்து கொண்ட மதுரோ அமெரிக்காவுடன் 'அக்கறையுடனான பேச்சு வார்த்தைகளை நடத்த விரும்புவதாக அறிவித்ததற்கு மறுநாளான ஜனவரி 3 வெனிசுலாவின் தலைநகர் மீது கடுமையான குண்டுத் தாக்குதல்களை நடத்திய அமெரிக்கப் படைகள் மதுரோவையும் மனைவியையும் கைது செய்து நியூயோர்க்கிற்கு கடத்திச் சென்றன.

ஆனால் பரவலாக எதிர்பார்க்கப்பட்டதை போன்று வெனிசுலாவின் இராணுவக் கட்டமைப்புக்களோ அரச இயந்திரமோ நிலை குலையவில்லை. இராணுவ ஆக்கிரமிப்பை கண்டனம் செய்த அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தது. கடந்த வருடத்தைய நோபல் சமாதானப் பரிசைப் பெற்றவரான வெனிசுலாவின் வலதுசாரி எதிர்க்கட்சி தலைவியான மறியா கொறினா மச்சாடோ அமெரிக்க ஜனாதிபதியின் கொள்கைகளை முற்று முழுதாக ஆதரித்து வருகின்ற போதிலும், அவர் நாட்டை ஆட்சி செய்வதற்கு தேவையான மக்கள் ஆதரவையும் மதிப்பையும் கொண்டவரல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி நிராகரித்து விட்டார்.

வெனிசுலா உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் துணை ஜனாதிபதி டெல்சி றொட்ரிக்கஸ் மறுநாளே பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார். அமெரிக்காவுடன் ஒத்துழைக்க மறுத்தால் டெல்சி பாரிய விலையைச் செலுத்த வேண்டியிருக்கும் என்று ட்ரம்ப் உடனடியாகவே எச்சரிக்கை செய்தார். பொருளாதார நெருக்கடி மற்றும் எதேச்சாதிகார ஆட்சிமுறை காரணமாக மதுரோவின் அரசாங்கம் மீது வெனிசுலா மக்களில் பெரும்பாலானவர்கள் வெறுப்புக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மை.

ஆனால் இறைமையுடைய ஒரு நாட்டின் தலைவரை கடத்திச் செல்வதற்கு அமெரிக்காவுக்கு எந்த அருகதையோ அல்லது அதிகாரமோ கிடையாது. தவறான ஆட்சி மற்றும் அடக்குமுறைக்காக வெளிநாட்டுத் தலைவர்களை கடத்திச் சென்று சிறை வைப்பதே ட்ரம்பின் வேலையாக இருக்குமானால் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவுடன் அதிகாரத்தில் இருக்கும் சிலர் உட்பட அத்தகைய ஆட்சியாளர்களின் நீண்ட பட்டியலில் இருந்து அவர் தெரிவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

தான் விரும்பும்வரை வெனிசுலாவை அமெரிக்கா நிருவகிக்கும் என்றும் அதன் பாரிய எண்ணெய் வளங்களைப் பயன்படுத்தப் போவதாகவும் ட்ரம்ப் வெளிப்படையாகவே பிரகடனம் செய்கிறார். சிறையில் இருக்கும் மதுரோவின் விசுவாசிகளினால் நிருவகிக்கப்படும் இடைக்கால அரசாங்கம் அமெரிக்கா தனக்கு அவசியமானது என்று உணருகின்ற சகலதையும் தருகிறது. வெனிசுலாவின் எண்ணெய் தொழில்துறையை அமெரிக்கா இலாபகரமாக மீளக்கட்டியெழுப்பும் என்றும் அந்த நாட்டுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற பணம் வழங்கப்படும் என்றும் அவர் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் நியூயோர்க் ரைம்ஸுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார்.

தென்னமெரிக்காவிலும் கரிபியன் பிராந்தியத்திலும் இரு நூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலமாக தலையீடுகளைச் செய்த நீண்ட வரலாற்றை அமெரிக்கா கொண்டிருக்கிறது. ஆனால் வெனிசுலா மீது ஜனவரி 3 நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களே தென்னமெரிக்க நாடொன்றின் மீதான அமெரிக்காவின் முதன் முதலான நேரடியான இராணுவ தாக்குதலாகும். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து அமெரிக்க கண்டத்தின் அயல்நாடுகளில் அமெரிக்கா பொருளாதார நெருக்குதல்கள் ஊடாக மாத்திரமல்ல, படையெடுப்புக்கள் மற்றும் ஆக்கிரமிப்புக்கள் என்று இராணுவ ரீதியாகவும் தலையீடுகளைச் செய்து வந்திருக்கிறது.


வெனிசுலாவில் கடந்தவாரம் அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை 1989ஆம் ஆண்டில் பனாமா நாட்டின் சர்வாதிகாரி மனுவேல் நொறீகாவைக் கைது செய்த நடவடிக்கையை நெருக்கமாக ஒத்ததாக இருக்கிறது. முன்னர் சி.ஐ.ஏ.யின் நண்பராக விளங்கிய நொறீகாவை கைது செய்வதற்காக பனாமாவை ஆக்கிரமிப்பதற்கு அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சுமார் 27 ஆயிரம் துருப்புக்களை அனுப்பினார். அவரைக் கைது செய்து அமெரிக்காவுக்கு கொண்டு சென்று இன்று மதுரோவுக்கு ட்ரம்ப் செய்ததைப் போன்று போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றங்களில் புஷ் நிருவாகம் நிறுத்தியது.

பிரேசில் சிலி மற்றும் ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களை பதவி கவிழ்த்து இராணுவ சர்வாதிகாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா உதவிய போதிலும், தென்னமெரிக்காவிலும் கரிபியனிலும் வெளிப்படையான இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்கா வரலாற்று ரீதியாக அதன் நெருங்கிய அயல் நாடுகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தியே வந்திருக்கிறது. ஆனால், தற்போது தென்னமெரிக்க நாடொன்றின் மீது நடத்தப்பட்ட நேரடியான இராணுவத் தாக்குதல் அமெரிக்காவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளில் ஏற்பட்டிருக்கும் முக்கியமான மாற்றத்தைக் குறித்து நிற்கிறது எனலாம்.


அமெரிக்காவுக்கு பாரதூரமான எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலையும் தோற்றுவிக்காத வெனிசுலாவில் எதற்காக ஆட்சி மாற்றத்தை ட்ரம்ப் விரும்புகிறார்? அந்த நாடு பெரியளவில் போதைப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற ஒரு நாடுமல்ல. அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு மூன்று முக்கிய காரணங்களை சர்வதேச அரசியல் அவதானிகள் அடையாளம் காண்கிறார்கள்.

(23ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! காரியங்களில் தாமதம் உண்டாகும். உடற்சோர்வு மன சோர்வு வரலாம். மிகவும் வேண்டியவரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! வீண் பகை உண்டாகலாம். நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். கவுரவ பங்கம் ஏற்படாமல் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும் வாங்கும் போதும் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண் அலைச்சல், இருக்கும்





மிதுனராசி அன்பர்களே! அதி முக்கிய காரியங்கள் சுபமாக நடக்கும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.





கடகராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இதுவரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடிவரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்





சிம்மராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். பயண செலவு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்




துலாம்ராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்தையும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகன லாபம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும்





விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். மனதில் இருந்த குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வீண் பிரச்சனைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.







தனுசுராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்து மதிப்பு கிடைக்க பெறுவீர்கள். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்யவேண்டி இருக்கும்..




மகரராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை தரும் காலகட்டமாக அமையும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! திடீர் மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். புத்திசாதூரியம் கூடும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியா பாரத்தில் முன்னேற்றமான நிலை காணப் படும். வியாபார நிமித்தமாக வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவர்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு கலந்தாலோசனை அவசியம்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) கைவிடுவது என்று அர்த்தமாகி விடாது. மாறாக, வேறுபட்ட யோசனைகளைக் கேட்டறிந்து பேச்சுவார்த்தைகளை நடத்தும் போது சிறந்த தீர்வுகளைக் காண்பதற்கான வாய்ப்புகள் தோன்றுகின்றன. குறிப்பாக விரைவான பயன்விளைவுகளை காணவேண்டிய நெருக்குதல்கள் தீவிரமாக இருக்கின்ற சூழ்நிலைகளில் கலந்தாலோசனை என்பது சலிப்பையும் வெறுப்பையும் தருவதாக இருக்கலாம். ஆனால், சம்பந்தப்பட்ட சகல தரப்புகளினதும் பங்கேற்புடன் வகுக்கப்படுகின்ற தீர்வுகள் செலவு குறைந்தவை என்பதுடன் நீண்டகால நோக்கில் பெருமளவுக்கு நெகிழ்வுத்தன்மையுடன் தாக்குப் பிடிக்கக் கூடியவையாகவும் இருக்கும்.

டித்வா சூறாவளிக்கு பின்னர் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் செயற்திட்டங்களைப் பொறுத்தவரை மலையக தமிழ்ச் சமூகம் எதிர் நோக்குகின்ற வரலாற்று ரீதியான அநீதியைக் கையாளுதல், கல்விச் சீர்திருத்தத்தை முன்னெடுத்தல், மேலும் தாமதமின்றி மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்காக தேர்தல் முறையை மாற்றுதல் ஆகியவையும் தேசிய நல்லிணக்கம் உட்பட வேறு பிரச்சினைகளும் அரசாங்கம் எதிர்நோக்குகின்ற சவால்களாக இருக்கின்றன. இவற்றைக் வேறுபாடுகளுக்கு அப்பால் பேச்சுவார்த்தைகளும் முரண்பாடில்லாத பொறுமையும் அவசியமாகும்.

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று, பேச்சுவார்த்தையை தொடங்குவது என்பது எவரும் தங்களது சொந்த நிலைப்பாடுகளையோ அல்லது பண்புகளையோ கைவிடுவதாக அர்த்தப்படாது. மாறாக, மற்றைய தரப்புகள் கூறுவதை கிரகித்து ஆராய்ந்து பரந்தளவிலான ஏற்புடைமையுடன் தீர்வுகளை எட்டுவதேயாகும்.

கலந்தாலோசனையை துரிதமாக தீர்ம்னங்களை எடுப்பதற்கான ஒரு தடையை அல்லாமல், நிலைபேறானதன்மையிலும் நியாயப்பாட்டிலும் செய்யப்படுகின்ற ஒரு முதலீடாக கருத வேண்டியது அவசியமாகும். ஒன்றுசேர்ந்து பிரச்சினைகளை அணுகுவது குறிப்பாக, பாதிக்கப்பட்ட தரப்புகளுடனும் அவர்களுடன் பணியாற்றுபவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பௌதீகக் கட்டமைப்புக்களை மாத்திரமல்ல, அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான சிறந்த சந்தர்ப்பத்தை தருகிறது.

# வடக்கை வெற்றி கொள்வது?

(17ம் பக்கத் தொடர்ச்சி) தற்காலிகமாக இணைக்கப்பட்டு இருந்த வடக்குக் கிழக்கை, ஒரு வழக்கின் மூலம் பிரித்தது ஜேவிபி. இப்பொழுது கேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியானது, அந்த வியூகத்தின் இறுதிக்கட்டத்தை நிறைவேற்றுவதற்காக வடக்கை நோக்கி உழைக்கின்றதா?

உட்கட்சிச் சண்டைகளை ஊடகங்கள் முன் பகிரங்கமாக விவாதிக்கும் தமிழரசுக் கட்சியும் உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த ஆபத்தை அதற்குரிய முழுப் பரிமாணத்தோடு விளங்கி வைத்திருக்கின்றனவா?

# தமிழகத்தை நொதிக்கச் செய்தல்:-

(15ம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறு மிகக்குறுகிய காலத்துக்குள் இரண்டு வேறு பிராந்தியங்களில் பேரரசுகளின் செல்வாக்கு மண்டலத்தில் வாழும் பலவீனமான மக்கள் கூட்டங்களுக்குள்ள வரையறைகளை உணர்த்திய இரண்டு ஆகப்பிந்திய உதாரணங்கள் இவை.

இந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்துள் வாழும் சிறிய அரசற்ற மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் தமது விடுதலையை வென்றெடுப்பதற்கான தீர்க்க தரிசனம் மிக்க உபாயங்களை வகுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தும் இரண்டு ஆகப்பிந்திய உதாரணங்கள் இவை. இந்த உதாரணங்களின் பின்னணியில் தான், தமிழ் நாட்டின் முதலமைச்சர் இந்திய மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்துக்கு உள்ள முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள வேண்டும்.

# வெறுங் கையுடன் வந்த வாங் ஜி

(19ம் பக்கத் தொடர்ச்சி) இடையில் தொடர்பு இருக்கலாம். இலங்கைக்கு வந்த சீனப் பிரதிநிதிகளின் குழுக்களிடமும் சீன தூதுவரிடமும், பேரிடரால் பாதிக்கப்பட்ட வீதிகள், பாலங்கள், ரயில்வே கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கு சீனாவின் உதவியை எதிர்பார்ப்பதாக, ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும், திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் சீனாவிடம் இருந்து, இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. இது பற்றி சீன வெளியுறவு அமைச்சரிடமும் நினைவுபடுத்தப்பட்டிருக்கிறது. நானும் அதில் கவனம் செலுத்துகிறேன் என்பது அவர் அளித்துள்ள பதில். எந்த வாக்குறுதியையும் அவர் கொடுக்கவில்லை.

இதிலிருந்து சீனா எதையோ ஒன்றை இலங்கையிடம் இருந்து எதிர்பார்க்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஏதோ ஒரு உத்தரவாதத்தை அது கோருகிறது. அது கிடைக்கும் வரை, இலங்கைக்கான உதவிப் பொதியை சீனா அறிவிப்பதற்கான சாத்தியம் இருப்பதாக தெரியவில்லை.

சீனாவிடம் இருந்து பெருந்தொகையான உதவியை பெற்றுக் கொள்ளலாம் என்ற இலங்கையின் எதிர்பார்ப்பை சீனா ஏமாற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

# அநுரவின் காட்சி அரசியலும் இலங்கையின் மாயாஜாலமும்!

(9ம் பக்கத் தொடர்ச்சி) ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அழைப்பு வந்திருந்தால் தாங்கள் போயிருப்போம் என்பது போன்றுள்ளது சத்தியலிங்கத்தின் கூற்று.

அநுரவின் வடபகுதி விஜயத்தையும் தமிழரசுக் கட்சியின் கருத்துகளையும் பார்க்கும் போது இவ்விடயத்தில் இவர்கள் குழம்பியிருப்பது போல தெரிகிறது. கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் நிலைப்பாடு என்னவாக இருக்குமோ தெரியாது.

# கேள்விக்குள்ளாகி இருக்கும் உலக நாடுகளின் பாதுகாப்பும் -இறைமையும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) முதலாவதாக, உலகின் மேற்கு அரைக் கோளத்தில் (Western Hemisphere) அமெரிக்காவின் முதன்மையை மீண்டும் திணிப்பதற்கு ட்ரம்ப் விரும்புகிறார். அமெரிக்காவின் ஐந்தாவது ஜனாதிபதியான ஜேம்ஸ் மொன்றோ அமெரிக்க கண்டத்தின் நாடுகளில் எதிர்காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் தலையீடுகளைச் செய்யாமலும் காலனித்துவ ஆதிக்கத்தைச் செலுத்தாமலும் இருப்பதை உறுதி செய்வதற்காக ஐரோப்பிய விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது என்று 1823 ஆம் ஆண்டில் உறுதியளித்து பிரகடனம் ஒன்றைச் செய்தார். அதுவே மொன்றோ கோட்பாடு (Monroe Doctrine) என்று அழைக்கப்பட்டது.

அந்த கோட்பாட்டின் வழியில் தற்போது அமெரிக்க நாடுகளை அமெரிக்காவின் செல்வாக்குப் பிராந்தியமாக வைத்திருப்பதில் ட்ரம்ப் நாட்டம் கொண்டிருக்கிறார். அண்மையில் அவரது நிருவாகத்தினால் வெளியிடப்பட்ட 'தேசிய பாதுகாப்பு கோட்பாடு' (National Security Doctrine) லத்தீன் அமெரிக்காவையும் கரிபியன் பிராந்தியத்தையும் மூலோபாய முன்னுரிமைக்குரியவையாக அடையாளம் காண்கிறது. இதற்கு அமெரிக்க ஊடகங்கள் 'டொன்றோ கோட்பாடு' (Donroe Doctrine) என்று வேடிக்கையாக பெயர் சூட்டியிருக்கின்றன.

லத்தீன் அமெரிக்காவில் வெளிப்பிராந்தியத்தைச் சேர்ந்த வல்லரசுகளின் (பிரதானமாக சீனா) செல்வாக்கை அல்லது கட்டுப்பாட்டை அமெரிக்கா நிராகரித்து அதன் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவச் செல்வாக்கின் கீழ் மேற்கு அரைக்கோளத்தை வைத்திருக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு கோட்பாட்டு ஆவணம் வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, அமெரிக்காவின் முதன்மைக்கு வலுவுட்டுகின்ற அதே வேளை மேற்கு அரைக்கோளத்தில் சீனாவினதும் ரஷ்யாவினதும் செல்வாக்கை தடுக்கவும் ட்ரம்ப் நிருவாகம் விரும்புகிறது. சீனா ஏற்கெனவே அதன் மண்டலமும் பாதையும் செயற்திட்டத்தின் ஊடாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாரிய முதலீடுகளைச் செய்திருக்கிறது. பிராந்தியத்தின் பெரும்பாலான நாடுகளின் மிகப்பெரிய அல்லது இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகவும் சீனா விளங்குகிறது

மூன்றாவதாக, லத்தீன் அமெரிக்காவின் பெரும்பாலான நாடுகளில் ஆட்சியில் இருக்கும் இடதுசாரிப் போக்குடைய தலைவர்களுக்கு பதிலாக தீவிர வலதுசாரிகளை அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கும் அமெரிக்கா விரும்புகிறது. மதுரோவின் கைதுக்குப் பிறகு செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய ட்ரம்ப் 'மேற்கு அரைக் கோளத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கம் மீண்டும் ஒரு போதும் கேள்விக்கு உட்படுத்தப்பட மாட்டாது என்று கூறியது கவனிக்கத்தக்கது.

வெனிசூலா மீது மேற்கொண்ட தாக்குதல் மூலமாக அமெரிக்கா மற்றைய நாடுகளின் இறைமையையும் பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. அரசுகள் அவற்றின் நிலப்பரப்பு உரிமைக் கோரிக்கைகளுக்காகவோ அல்லது அரசியல் கோரிக்கைகளுக்காகவோ படைபலத்தைப் பிரயோகிக்கக் கூடாது என்று கடந்த நூற்றாண்டில் இரு உலகப்போர்களின் பயங்கரங்களுக்கு பிறகு இணங்கிக் கொள்ளப்பட்ட சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டை அமெரிக்கத் தாக்குதல் வலுவிழக்கச் செய்திருக்கிறது என்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்காக உலகிடம் இருக்கும் ஒரேயொரு பொறிமுறையான ஐக்கிய நாடுகளை அமெரிக்காவின் நடவடிக்கை மோசமாகப் பலவீனப்படுத்தியிருக்கிறது என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க் கவலை தெரிவித்திருக்கிறார். சட்டத்தின் ஆட்சிக்காக சர்வதேச சமூகம் துணிச்சலுடன் குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

வெனிசூலாவையடுத்து ட்ரம்ப் கொலம்பியா, கிறீன்லாந்து, மெக்சிக்கோ, கியூபா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளையும் அச்சுறுத்துகிறார்.

மதுரோ அரசாங்கத்தைக் கண்டனம் செய்வதில் முன்னர் காட்டியதைப் போன்ற உத்வேகத்தை அந்த நாட்டின் இறைமையை மீறிய ட்ரம்பின் ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்வதில் ஐரோப்பிய நாடுகள் காண்பிக்கவில்லை.

இலாபத்துக்காகவும் அரசியல் மேலாதிக்கத்துக்காகவும் அமெரிக்காவின் வல்லமையை தொடர்ந்தும் பயன்படுத்துவதில் ட்ரம்ப் உறுதியாக இருக்கிறார் என்பதை அவரின் நியூயோர்க் ரைம்ஸ் நேர்காணல் பிகாசமாக அம்பலப்படுத்துகிறது.

சர்வதேச சட்டங்களுக்கும் நியமங்களுக்கும் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும் என்று தான் உணரவில்லை என்று கூறிய அவரிடம் அமெரிக்க இராணுவ வல்லமையைப் பயன்படுத்துவதற்கான ஆற்றலில் ஏதாவது மட்டுப்பாடுகள் இருக்குமா என்று கேட்கப்பட்டபோது தனது சொந்த மனத்தினால் மாத்திரமே அதை நிறுத்த முடியும் என்று பதிலளித்தார்.

சர்வதேச சட்டம் தனக்கு தேவையில்லை என்றும் இரண்டாவது உலகப் போருக்கு பின்னரான காலப்பகுதியில் அமெரிக்காவின் உதவியுடன் நிறுவப்பட்ட உலக ஒழுங்கு இன்று அநாவசியமான ஒரு சுமையாக இருக்கிறது என்றும் ட்ரம்ப் கூறிய வார்த்தைகள் உலகம் வரும் நாட்களில் எதிர் நோக்கப் போகும் ஆபத்துக்கு கட்டியம் கூறுகிறது.

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation


Vilosanan Sivatharman
416-993-0826


Christeen Seevaratnam
416-258-6759

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# "நோபல் பரிசு" மறுக்கப்பட்டதால் கிரீன்லாந்தை வாங்க அடம்பிடிக்கும் டிரம்ப்!

அமெரிக்க அதிபர் Donald Trump டென்மார்க் நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள தன்னாட்சி பெற்ற கிரீன்லாந்து தீவை அமெரிக்கா முழுமையாகக் கையகப்படுத்த வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளார். கடந்த 2025ஆம் ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசு தனக்கு வழங்கப்படாததே, தற்போது அவர் கிரீன்லாந்து விவகாரத்தில் இவ்வளவு பிடிவாதமாக இருப்பதற்குக் காரணம் என்று அவரே ஒரு கடிதத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இது சர்வதேச அரசியல் தளத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 18, 2026) இரவு, நார்வே பிரதமர் Jonas Gahr Støre அவர்களுக்கு டிரம்ப் ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். அதில், சுமார் எட்டு போர்களைத் தடுத்து நிறுத்திய எனக்கு நோபல் அமைதிப் பரிசை வழங்க உங்கள் நாடு முன் வராத நிலையில் இனி நான் அமைதியைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. அமெரிக்காவின் நலனுக்காக எதையும் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளேன் என்று குறிப்பிட்டிருந்தார். உலகப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமானால், கிரீன்லாந்து அமெரிக்காவின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றும் அவர் அந்தச் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

கிரீன்லாந்து தீவானது இயற்கை வளங்கள் மற்றும் கனிம வளங்கள் நிறைந்த ஒரு பிராந்தியமாகும். குறிப்பாக ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தை ஆர்க்டிக் பகுதியில் கட்டுப்படுத்த, இந்தத் தீவு அமெரிக்காவிற்கு மிகவும் அவசியமானது என்று டிரம்ப் கருதுகிறார். 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி முதல் கிரீன்லாந்து விற்பனைக்கு உடன்படாத ஐரோப்பிய நாடுகள் மீது 10 சதவீத வரி விதிக்கப்படும் என்றும், அது ஜீன் மாதம் 25 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.





THE WHITE HOUSE
WASHINGTON D.C.

January 19, 2026

Dear Jonas:

Considering your Country decided not to give me the Nobel Peace Prize for having stopped 8 Wars PLUS, I no longer feel an obligation to think purely of Peace, although it will always be predominant, but can now think about what is good and proper for the United States of America.

Denmark cannot protect that land from Russia or China, and why do they have a "right of ownership" anyway? There are no written documents, it's only that a boat landed there hundreds of years ago, but we had boats landing there, also.

I have done more for NATO than any other person since its founding, and now, NATO should do something for the United States. The World is not secure unless we have Complete and Total Control of Greenland.

Thank you!

Donald J. Trump

இந்த விவகாரத்தில் நார்வே நாட்டின் மீது டிரம்ப் கோபமடைய ஒரு முக்கியக் காரணம் உள்ளது. நோபல் அமைதிப் பரிசை வழங்கும் குழு நார்வே நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டாலும், அது ஒரு சுதந்திரமான அமைப்பு என்று நார்வே அரசு விளக்கியுள்ளது. இருப்பினும், டிரம்ப் அதை ஏற்க மறுக்கிறார். கடந்த வாரம் வெனிசுலா நாட்டு எதிர்க் கட்சித் தலைவி María Corina Machado தனக்குக் கிடைத்த நோபல் பதக்கத்தை டிரம்பிற்குப் பரிசாக வழங்கினார். ஆனால் பதக்கத்தை வைத்திருப்பதால் மட்டுமே ஒருவர் நோபல் வெற்றியாளராக முடியாது என்று நோபல் குழு திட்டவட்டமாக அறிவித்தது டிரம்பிற்கு மேலும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

டிரம்ப்பின் இந்த அதிரடித் திட்டங்களுக்கு டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து அரசாங்கங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. கிரீன்லாந்து விற்பனைக்கு அல்ல என்று அந்நாட்டு மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையில், ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவின் இந்த வரி விதிப்பு மிரட்டலுக்கு எதிராகப் பொருளாதாரப் பதிலடி கொடுக்கத் தயாராகி வருகிறது. இது ஒரு சர்வதேச வர்த்தகப் போராக உருவெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஜனவரி 19, 2026 அன்று வெளியாகியுள்ள இந்தத் தகவல்கள், டிரம்ப்பின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் எவ்வாறு உலக நாடுகளின் வெளியுறவுக் கொள்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதற்கு உதாரணமாகத் திகழ்கின்றன. கிரீன்லாந்து மக்கள் தங்கள் இறையாண்மையைப் பாதுகாக்கப் போராடி வரும் நிலையில் அமெரிக்கா தனது பிடியை இறுக்கப் பார்க்கிறது. பொருளாக மாறியுள்ளது.

இது இவ்வாறிருக்க உக்ரைனில் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் காஸா அமைதி வாரியத்தில் சேர ரஷ்யாவின் விளாடிமிர் புடினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உலகளாவிய மோதல்களைத் தீர்ப்பதுடன், காஸாவில் நிர்வாகம் மற்றும் புனரமைப்புப் பணிகளைக் கண்காணிப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது ட்ரம்பின் இந்த அமைதி வாரியம். திங்கட்கிழமை வெளியான இந்த அழைப்பு, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஏறக்குறைய நான்கு வருடப் போர் தொடரும் நிலையிலும், அங்கு ஒரு சமாதான ஒப்பந்தம் எட்டப்படாமல் இருக்கும் சூழ்நிலையிலும் விடுக்கப்பட்டுள்ளது. உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர ட்ரம்ப் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தாலும், தான் பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள் போரை நிறுத்தி விடுவேன் என்று ஒரு வருடத்திற்கு முன்பு ட்ரம்ப் கூறியிரு ந்தார்.

ஒரு பக்கம் போர் தீவிரமடைந்து வர, மறுபக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் தொடர்கின்றன, ஆனால் அதன் வேகம் மீண்டும் குறைந்துவிட்டது. இந்த நிலையில், ட்ரம்ப் தாமே தலைமை வகிக்கும் இந்த காஸா அமைதி வாரியத்தில் இடம்பெறுவதற்காக, வெள்ளை மாளிகை உலகம் முழுவதிலும் உள்ள முக்கியப் பிரமுகர்களைத் தொடர்பு கொண்டுள்ளது.

இந்தியாவின் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும், உடனடியான பதில் ஏதும் தெரிவிக்கப் படவில்லை. ஆனால் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் இந்த அழைப்பை நிராகரிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே, அமைதிக்கான இந்த வாரியத்தில் சேருவதற்கு ஜனாதிபதி புடினுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

புடின் இதில் சேர விருப்பம் கொண்டுள்ளாரா என்பது குறித்துக் குறிப்பிடாமல், அந்த வாரியத்தின் அனைத்து நுணுக்கங்களையும் அமெரிக்காவுடன் தெளிவுபடுத்திக் கொள்ள ரஷ்யா முயன்று வருவதாக அவர் கூறினார். புடினின் கூட்டாளியான பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவையும் இந்தக் குழுவில் சேருமாறு ட்ரம்ப் அழைப்பு விடுத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பல ஆண்டுகளாக இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்கள் உட்பட மத்திய கிழக்கின் அனைத்து முக்கிய தரப்பினருடனும் உறவுகளைச் சமநிலைப்படுத்த ரஷ்யா முயற்சித்து வந்துள்ளது. புடின் இஸ்ரேலிடமிருந்து விலகி ஈரான் போன்ற அதன் எதிரிகளுடனான உறவுகளை வலுப்படுத்தி வருகிறார்.

